## உள்ளே...


1. வைகறை நிழல்கள் 5

2. விலகு, விபரீதம்! 88

3. இதுதான் சொர்க்கம்! 162


# வைகறை நிழல்கள்

## 1

பரணி ஸ்காட்ச் பாட்டிலை - ரிப்பன் வெட்டித் திறந்து முதல் ரவுண்டை ஆரம்பித்திருந்தபோது அவனுக்கு எதிரே டீபாயின் மேல் உட்கார்ந்திருந்த இண்டர்காம் கிராமத்துப் புதுப் பெண்டாட்டி மாதிரி சிணுங்கியது. நேரம் இரவு... பத்து நாற்பது.

ரிஸீவரை எடுத்து ''எஸ்'' என்றான்.

கீழேயிருந்து வேலையாள் பேசினான்.

''அய்யா! நம்ம டாக்டர் வந்திருக்கார். நீங்க வரச் சொன்னதா...?''

''மேலே அனுப்பு...''

''சரிங்கய்யா...''

''அப்புறம்... கேளு...! நானும் டாக்டரும் மேலே பேசிட்டிருக்கும் போது... என்னை யாராவது தேடி வந்தா இல்லேன்னு சொல்லிடு... டெலிபோன் வந்தாலும் அதே பதில்தான்.''

''சரிங்கய்யா...''

பரணி ரிஸீவரை வைத்துவிட்டு கண்ணாடி டம்ளரில் மிச்சமிருந்த ஸ்காட்சை ஒரே மூச்சில் விழுங்கிவிட்டு தலையை உசுப்பிக் கொண்டான்.

பரணிக்கு முப்பது வயது இருக்கலாம். மாநிறத்துக்கும் சற்று குறைவான நிறத்தில் - அம்மைத் தழும்புகளோடு கூடிய முகம்... தூங்கும் கண்கள். அடர்த்தி குறைந்த மீசைக்கு கீழே... சிகரெட் புகையில் வாட்டப்பட்ட உதடுகள். துக்கத்திலும், சந்தோஷத்திலும் குறையாத அதிகமாகாத உடம்புக் கட்டு. மேட்டுப்பாளையம் ரோட்டில் இருக்கிற பரணி ஹெவி காஸ்டிங்க்ஸ் நிறுவனத்துக்கு ஒரு பார்ட்னர். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் கிருபா என்கிற பெண்ணுக்கு மனைவி என்னும் உறவைக் கொடுத்தவன்.

மாடிப்படிகளில் டாக்டர் பஞ்சவர்ணத்தின் ஷூ சத்தம் சீராய் தாள லயத்தோடு கேட்டு வராந்தாவுக்குள் நுழைந்து அறைக்கு முன்னால் வந்து நிசப்தமாயிற்று.

"வாங்க டாக்டர்..."

டாக்டர் பஞ்சவர்ணம் உள்ளே வந்தார். நாற்பது வயது. காதோரங்களில் சுண்ணாம்பு தீற்றல்பட்ட மாதிரி நரை. சதைப் பிடிப்பான முகத்தில் கவலை முகாம் போட்டிருந்தது. சாம்பல் நிற சபாரி சூட்டுக்குள்... சிரமமாய் புகுந்திருந்தார்.

உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

"வீட்ல கிருபா இல்லையா...?"

"பொறந்த வீட்டுக்கு போயிருக்கா. ஊர்ல ஏதோ பண்டிகையாம்."

"கிருபா... இல்லாத தைரியத்துலதான்... ப்ரீயா தீர்த்தம் போடறீங்க போலிருக்கு..."

"நோ டாக்டர்! நான் என்னிக்குமே நாலைஞ்சு ரவுண்டுக்கு மேலே போக மாட்டேன்னு அவளுக்குத் தெரியும்! நீங்க... கம்பெனி தர்றீங்களா...? ஒரேயொரு பெக்..."

"வேண்டாமே...!"

"ப்ளீஸ்... எனக்காக..."



"சரி... ஒரு ஸ்மால் மட்டும்..." இடது கையின் ஆட்காட்டி விரலையும், கட்டை விரலையும் சுருக்கி ஒரு பொடி டப்பா மாதிரி காட்டினார். பரணி ஸ்காட்ச் பாட்டிலைச் சாய்த்து... டம்ளரில் கொஞ்சமாய் ஊற்றி... சோடா கலந்து பிளாஸ்கில் இருந்த ஐஸ் க்யூப்களை மெல்ல கிடுக்கியால் எடுத்துப் போட்டார்.

டாக்டர் கண்ணாடி டம்ளரை எடுத்து சியர்ஸ் சொல்லி உதட்டில் வைத்து லேசாய் ருசித்துவிட்டுக் கேட்டார்.

"பரணி! நான் சொன்னதை கன்சிடர் பண்ணீங்களா...?"

பரணி புன்னகைத்தான்.

"நீங்க கேட்ட இரண்டு லட்ச ரூபாய் கடன் தானே...?"

"ஆமா"

"நர்சிங்ஹோம் கட்டிடத்தைக் கட்டி முடிக்க... ரெண்டு லட்சம் போதுமா டாக்டர்!"

"மொத்தம் முப்பத்து இரண்டு லட்ச ரூபாய் எஸ்டிமேஷன். முப்பது லட்ச ரூபாய்க்கு பேங்க் மூலம் அரேன்ஜ் பண்ணிட்டேன். மீதி ரெண்டு லட்சத்துக்குத்தான்... உங்ககிட்டே கேட்டிருக்கேன்..."

"இப்ப இருக்கிற நர்சிங்ஹோம்... வாடகை கட்டிடமா?"

"ஆமா... அவங்க ரெண்டு வருஷமா காலி பண்ணச் சொல்லி நோட்டீஸ் கொடுத்திருக்காங்க... அதுதான் புதுசா... சேரன் நகர்ல நர்சிங்ஹோமை கட்டிடலாம்கிற முயற்சியில் இறங்கிட்டேன்."

"பணம் உங்களுக்கு எப்ப வேணும்?"

"இந்த மார்ச் கடைச்சிக்குள்ளே... கைக்கு கிடைச்சா... கட்டிட வேலையை ஆரம்பிச்சிடுவேன். கடந்த பத்து வருஷ காலமா உங்க குடும்பத்துக்கு ஃபேமிலி டாக்டரா... இருந்துட்டு வர்றேன். உங்க ஃபாதர் மதர் உயிரோடு இருந்த காலத்திலும் கூட நான் கடனா

எதையும் கேட்டதில்லை... இப்போ உங்ககிட்ட கேக்க வேண்டிய கட்டாயம்.''

பரணி புன்னகைத்தான்.

''அந்த ஸ்மாலை குடிச்சு முடிங்க டாக்டர் ஒரு லார்ஜ் ஊத்தறேன்.''

''வேண்டாம் பரணி...! நான் லிக்கர் அதிகமா எடுத்துக்கிற தில்லை.''

''இன்னிக்கு சாப்பிடுங்க நான் உங்ககூட கொஞ்சம் பேசணும்...''

''இட்ஸ்...ஓ...கே...'' பஞ்சவர்ணம் ஸ்மாலை ஒரே விழுங்காய் விழுங்கிவிட்டு டம்ளரைக் கீழே வைக்க - பரணி மறுபடியும் பார்த்தான்.

''டாக்டர்! நீங்க ரெண்டு லட்சம் கடன் கேட்டீங்க...! நான் அதை உங்களுக்கு கடனாத் தர விரும்பலை.''

பஞ்சவர்ணம் திகைப்பாய் நிமிர்ந்தார்.

''பின்னே...?''

''நான் மனசுல ஒரு திட்டம் போட்டு வெச்சிருக்கேன். அந்த திட்டத்தை செயல்படுத்த நீங்க உதவினா போதுங்க. அந்த உதவிக்காக ரெண்டு லட்ச ரூபாயை என்னோட அன்பளிப்பா தர்றேன்...''

பிரேமிட்ட கண்ணாடிக்குள் பஞ்சவர்ணத்தின் கண்கள் பெரிதாயிற்று. முகத்தில் ஒரு குபீர் சந்தோஷம்.

''அன்பளிப்பா தர்றீங்களா...''

''எஸ்...''

''உங்களுக்கு நான் எந்த வகையில உதவணும்...''



''லார்ஜை குடிங்க... சொல்றேன்'' - டம்ளரை அவர் கையில் எடுத்துக் கொடுத்த பரணி - டீபாயின் மேலிருந்த சிகரெட் ஒன்றை உருவி உதட்டில் பொருத்திக் கொண்டான். லைட்டரைத் தட்டி சிகரெட் முனையை பொசுக்கி முதல் புகையை வெளியிடு வதற்குள்... பஞ்சவர்ணம் லார்ஜை முடித்துவிட்டு வியர்த்துப் போன முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டார்.

''பரணி''

''அயர்ம் நாட் ஜோக்கிங் டாக்டர். நிஜமாத்தான் சொல்றேன். நான் மனசுல போட்டிருக்கிற ஒரு சுலபமான திட்டத்துக்கு நீங்க உதவினா... அதுக்கு ஃபீஸ் இரண்டு லட்ச ரூபாய். ஒரு பைசா கூட நீங்க எனக்கு திருப்பித் தரவேண்டியதில்லை...''

''எ.. என்ன திட்டம்!''

''இப்ப... இருக்கிற உங்க நர்சிங்ஹோம்ல நான் ஒரு ரெண்டு மாசம் பேஷண்டா... ஐ...மீன் அசைய முடியாத பேஷண்டா... படுத்திருக்கணும்...''

பஞ்சவர்ணம் நெற்றியைச் சுருக்கினார்.

''பேஷண்டா படுத்துக்கப் போறீங்களா?''

''ஆமா...''

''எதுக்கு...?''

''சொன்னா அதிர்ச்சியடைய மாட்டீங்களே டாக்டர்.''

''சரி... சரி... சொல்லுங்க...''

பரணி தன் விரலிடுக்குகளில் தீவிரமாய் புகைந்து கொண்டிருந்த சாம்பலை ஆஷ்ட்ரேயில் உதிர்த்துவிட்டு, புன்னகையோடு டாக்டரை ஏறிட்டான். ''டாக்டர்! இந்த சிட்டியில் எனக்கு வேண்டாத நபர்கள் மூன்று பேர் இருக்காங்க.... அவங்களை இன்னும் ஒரு

மாசத்துக்குள்ளே களை எடுத்தாகணும். இல்லேன்னா அவங்களால நான் களையெடுக்கப்பட்டுடுவேன்.

பஞ்சவர்ணம் அதிர்ந்தார்.

''பரணி! யூ...மீன்...?''

''அந்த மூணுபேரோட கதைகளை நான் முடிக்கணும். இல்லேன்னா அவங்களாலே என்னோட கதை முடிஞ்சுடும்...''

பஞ்சவர்ணத்தின் முகம் கபாலென்று வியர்த்திருந்தது. கர்சீப்பை எடுத்து வேக வேகமாய் முகத்தை ஒற்றிக் கொண்டார்.

பரணி தொடர்ந்தான்.

''டாக்டர்! கடந்த ஒரு மாச காலமாகவே எனக்கு இந்த மன உளைச்சல் இருக்கு. மன உளைச்சலுக்கு காரணம் அந்த மூணுபேர். நானும் எத்தனையோ தடவை அவங்களோடு அனுசரிச்சு போகப் பார்த்தேன். முடியலை... அமுக்கப் பார்த்தாங்க... நான் சுதாரிச்சுட் டேன். இனியும் நான் எந்த ஸ்டெப்சும் எடுக்காம இருந்தா... வளையம் வெச்சு... கிருபாவுக்கு அனுதாப வார்த்தைகளை சொல்ல வேண்டி வந்துடும்...''

''பரணி!''

''எஸ்... டாக்டர்... இட்ஸ்... ஏ... பிட்டர் ஃபாக்ட். அவங்க முந்திகிட்டு என்னை சாய்க்கிறதுக்கு முன்னாடி... நான் முந்திகிட்டு அவங்களைச் சாய்க்கணும். நான் போட்டிருக்கிற திட்டம் ரொம்ப ரொம்ப சுலபமானது டாக்டர். இந்த வாரத்துல ஏதாவது ஒரு நாள் ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேல் நான் காரை எடுத்துகிட்டு சிட்டியைவிட்டு தள்ளியிருக்கிற ஹைவேஸ் ரோட்டுக்கு போய் காரை ஒரு பள்ளத்துல தள்ளிவிட்டு கவுந்து கிடக்கிற கார்க்குள்ளே நுழைஞ்சு... எசகு பிசகா படுத்துக்குவேன். என்னோட ப்ளட் க்ரூப் ரத்தத்தை ஒரு பாட்டில்ல கொண்டு போய் கார்க்குள்ளே தெளிச்சுட வேண்டியது. ரெண்டாவது கட்டம் அந்த வழியா எதேச்சையா



உங்க கார்ல வர்ற நீங்க... என்னைக் காப்பாத்தி... உங்க நர்சிங்ஹோமுக்கு கொண்டு போயிடறீங்க...''

பஞ்சவர்ணம் பிரமிப்பால் கேட்டுக் கொண்டிருக்க... பரணி சிகரெட்டை ஒரு இழுப்பு இழுத்துவிட்டுத் தொடர்ந்தான். ''அந்த திட்டத்துல மூணாவது கட்டம் தான் முக்கியமானது டாக்டர். உங்களுடைய ஒத்துழைப்பும்... இந்த கட்டத்துலதான் எனக்கு அதிகமா வேண்டியிருக்கும். என்னை உங்க நர்சிங்ஹோம்ல இருக்கிற ஸ்பெஷல் ரூம்ல அட்மிட் பண்றீங்க. ரெண்டு கால் எலும்பிலேயும்... முறிவு ஏற்பட்டிருக்குன்னு சொல்றீங்க... என் மனைவி கிருபா உட்பட எல்லோருமே இதை உண்மைன்னு நம்பற மாதிரி உங்க... மெடிக்கல் ட்ரீட்மெண்ட்ஸ் இருக்கணும். ரெண்டு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்ட... ஒரு முன்னாள் பேஷன்டோட எக்ஸ்ரேக்களை என்னோட எக்ஸ்ரேக்கள் மாதிரி காட்டணும். நிஜமாவே ஒருத்தனுக்கு ரெண்டு காலிலேயும் எலும்பு முறிவு ஏற்பட்டா... அவன் எந்த மாதிரி வலியில துடிப்பானோ... அதே துடிப்பை நானும் காட்டுவேன்...''

''ப...ர...ணி'' டாக்டரின் குரல் குழற...

பரணி சிரித்தான்.

''பயப்படாதீங்க டாக்டர். இந்த திட்டத்தை ரொம்பவும் துல்லியமாய் போட்டிருக்கேன். எந்த இடத்திலேயும் இடறல் கிடையாது. ரெண்டு கால்களிலும் கனமான பாண்டேஜ்களோடு.. ஒரு வாரம் படுத்துக் கிடப்பேன். பிறகு மூணு பேர்ல ஒருத்தனைக் குறிவெச்சு... ஏதாவது ஒரு ராத்திரி வெளியே கிளம்பி அவனைத் தீர்த்துட்டு வந்து நல்ல பிள்ளையாட்டம் கால்களுக்கு பாண்டேஜை சுத்திகிட்டுப் படுத்துக்குவேன். ஒரு வாரம் ரெஸ்ட். அதற்கடுத்த வாரம்... ரெண்டாவது ஆளுக்குக் குறி வைப்பேன்.''

டாக்டர் பஞ்சவர்ணம் பயத்தினின்றும் கொஞ்சம் தெளிந்திருந்தார்.

"பரணி! நீங்க பேசறது எனக்கு ஆச்சரியமாயிருக்கு. ஒரு நல்ல பேமிலியில பிறந்த நீங்க... மூணு பேரைக் கொலை பண்ண நினைக்கிறது எனக்கு பிரமிப்பா இருக்கு... நீங்க பேசறதை என்னால நம்ப முடியலை..."

"நம்புங்க டாக்டர்! நூறு பர்செண்ட் நம்புங்க. தன்னைத் துறத்தற புலி கிட்டேயிருந்து ஒருத்தன் உயிர் தப்பணும்ன்னா... கடைசி பட்சமா... அதை எதிர்த்து மோதிப் பார்ப்பான். அந்த நிலைமைதான் எனக்கும். என்னோட தற்காப்புக்குத்தான் அந்தக் கொலைகள். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி... அவங்களை நான் தீர்க்கலைன்னா... அவங்களால நான் தீர்க்கப் பட்டுடுவேன்..."

"யார் அந்த மூணுபேர்...?"

"உங்களுக்கு அந்த விபரமெல்லாம் வேண்டாம் டாக்டர். நீங்க உங்க ஹாஸ்பிடல்ல ஒரு ரெண்டு மாசம் வெச்சிருந்து ட்ரீட்மெண்ட் தர்ற மாதிரி பாவ்லா காட்டினா போதும்... என்னோட திட்டம் பூர்த்தியானதும் உங்க கைக்கு இரண்டு லட்ச ரூபாய் கேஷ் வரும். என்ன சொல்றீங்க...?"

டாக்டர் பஞ்சவர்ணம் யோசிக்க ஆரம்பித்தார்.

## 2

வருமானவரி இலாகாவை சேர்ந்த அந்த ரெண்டு கார்களும் மில் காம்பவுண்ட் கேட்டுக்குள் நுழைந்து - நிர்வாக அலுவலகத்தின் போர்டிகோவுக்குள் அம்பு தைத்த மாதிரி நின்றன. வெள்ளை பேண்ட் வெள்ளை சர்ட்டுக்குள் - எழுந்த ஏழு அதிகாரிகளும் சீஃப் ஆபீஸர் அகர்வால் தலைமையில் உள்ளே நுழைந்தார்கள்.

அலுவலர்கள் ஸ்தம்பித்துப் போக மேஜையின் மேல் கிடந்த பைல்களையும் லெட்ஜர்களையும் அள்ளிக் கொண்டார்கள்.



அகர்வால், மானேஜிங் டைரக்டர் திருமலைச்சாமியின் ஏஸி அறைக்குள் நுழைந்து அவர் கையெழுத்திட்டுக் கொண்டிருந்த செக் புக்கைப் பறிக்கிற தினுசில் அதன் மேல் கையை வைத்தார்.

"எக்ஸ்க்யூஸ்மீ மிஸ்டர் திருமலைச்சாமி... வீ...ஆர் கம்மிங் ப்ரம் இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட்... மேஜை மேல் இருக்கிற திங்க்ஸ் எதையும் டிஸ்டர்ப் பண்ணாமே... இப்படி நகர்ந்து வந்துடறீங்களா?"

திருமலைச்சாமி ரிவால்விங் நாற்காலியினின்றும் அரண்டு போய் எழுந்து அகர்வாலுக்குப் பக்கமாய் வந்து நின்றார். அவர் கேட்டார்.

"ஐ.டி.க்கு ஃபைல் பண்ணீட்டீங்களா?"

"பண்ணிட்டேன்..."

"லாஸ்ட் இயர் அஸஸ்மெண்ட் ஆர்டர் காப்பி இருக்கா?"

"இருக்கு."

"குடுங்க..."

திருமலைச்சாமி இண்டர்காமில் அக்கவுண்ட்டண்டோடு பேசிவிட்டு அகர்வாலிடம் திரும்பினார் "அக்கவுண்ட்ஸ் எல்லாமே ப்ராப்ரா மெயின்டெய்ன் பண்றோம் சார்."

"மிஸ்டர் திருமலைச்சாமி...! எது ப்ராப்பர்... எது இம் பிராப்பர் எனக்கு நல்லாவே தெரியும். உங்ககிட்டே கொஞ்சம் தனியா பேசணும்... இங்கேயே பேசலாமா...? இல்லே மில்லுல உங்களுக்குன்னு பிரைவஸி ரூம் ஏதாவது இருந்தா அங்கே போயிடலாமா?"

"இ... இ... இங்கேயே பேசலாம்..."

அகர்வால் போய் கதவைச் சாத்திவிட்டு வந்தார். திருமலைச்சாமிக்கு நாற்காலியைக் காட்டிவிட்டு எதிரே இருந்த நாற்காலியில் தானும் உட்கார்ந்தார். மெல்லிய குரலில் கேட்டார்.

"உங்க ஆடிட்டர் யாரு?"

"சிவராமகிருஷ்ணன்."

"ஆர்.எஸ்.புரத்தில இருக்காரே... அவரா?"

"ஆமா..."

"மொதல்ல ஆடிட்டரை மாத்துங்க... அவ்வளவு பெரிய மில் நிர்வாகத்துக்கு திறமையான ஆடிட்டர் வேண்டாமா..."

திருமலைச்சாமி விழிக்க

அகர்வால் தொடர்ந்தார்.

"உங்க பி.எம். அக்கவுண்ட் எவ்வளவுன்னு உங்களுக்கு தெரியாமே இருக்கலாம். ஆனா எனக்குத் தெரியும்... அந்த அக்கவுண்ட் எந்தெந்த இடத்துல... யார் யார் கிட்டே... எப்பேர்ப்பட்ட ரூபத்துல இருக்குங்கிற விபரமும் எனக்குத் தெரியும்."

"ஸ... ஸார்"

அகர்வால் கையமர்த்தினார்.

"இதுதவிர... உங்க... ஷேர்... சர்டிபிகெட்ஸ், டெபாசிட்ஸ், கோல்ட் பிஸ்கட்ஸ், ஸேஃப்டி லாக்கர்ல இதைப்பத்தி டீடெய்ல்சும்... என்கிட்டே இருக்கு."

"ஸ...ஸார்!"

நீங்க வயசில பெரியவங்க! என்னை 'ஸார்'ன்னு கூப்பிடாதீங்க... ஃப்ரெண்ட்லியாவே பேசிக்குவோம்... கணக்குக் காட்டாத பணம் ஒரு எண்பது லட்சம் இருக்குமா...?"

"நோ... நோ இருக்காது..."



"மிஸ்டர் திருமலைச்சாமி! நான் இப்போ உத்தியோக தோரணையா... பேசலை. எங்க டிபார்ட்மெண்ட் ஆட்கள் இன்னும் ரெண்டு மணி நேரத்துக்கு உங்க ஆபீஸ்ல உட்கார்ந்து அக்கவுண்ட் லெட்ஜர்களையும் பைல்களையும் பார்த்து... சின்னச் சின்னத் தப்புகளைக் கண்டுபிடிச்சுட்டுருப்பாங்க... அதுக்குள்ளே நாம சில டெர்ம்ஸைப் பேசி முடிக்கணும்."

"டேர்ம்ஸா...?"

"எஸ்... கணக்குக் காட்டாத அக்கவுண்ட்ல ஒரு அஞ்சு பர்செண்டை எனக்குத் தாரை வார்த்துடுங்க... நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்."

திருமலைச்சாமியின் முகம் 'பளிச்'சென்று சந்தோஷத்துக்கு போயிற்று. "அஞ்சு பர்செண்ட் குடுத்துட்டா... 'ரைடு' இருக்காதே..."

"ஒரு வாரத்துக்கு எட்டிப் பார்க்க மாட்டோம்."

"பணம் எண்ணிக்குத் தரட்டும்..."

"ரெண்டு நாள் கழிச்சு... உங்ககிட்டே ஒரு ஆளை அனுப்புவேன். அந்த ஆள்கிட்டே பணத்தைக் கொடுத்து அனுப்பிடுங்க."

"சரி..."

"என்னை லஞ்ச ஒழிப்புத் துறைக்கு காட்டிக் கொடுக்க முயற்சி செஞ்சா மாட்டிக்கப் போறது நீங்கதான் திருமலைசாமி. எனக்கு ஸ்டேட்லயிருந்து சென்ட்ரல் வரைக்கும் கட்சி ஆட்களும், கவர்மெண்ட் ஆட்களும்... இருக்காங்க... என்னை எந்தக் கொம்பனும் அசைக்க முடியாது..."

பயம் விட்டுப் போக திருமலைச்சாமி சிரித்தார்.

"நான் எதுக்காக உங்களைக் காட்டிக் கொடுக்கப் போறேன்? கண்ணாடி வீட்ல இருந்துகிட்டு... கல்லெறிய எனக்குப் பைத்தியமா பிடிச்சிருக்கு! ரெண்டு நாள் கழிச்சு உங்க ஆளை அனுப்புங்க... பணம் கொடுத்து அனுப்புறேன்."

"தொகை எவ்வளவு தெரியுமா?"

"எவ்வளவு?"

"நாலு லட்சம்..."

"அதிகமில்லையா?..."

"இது அதிகமா... குறைவா...ன்னு ரெய்ட் நடத்திப் பார்த்துடலாமா?"

"வே... வேண்டாம்..."

"வேண்டாம்னா... நாலு லட்சத்தைக் கொடுத்து அனுப்புங்க..."

"அனுப்பறேன்..."

"குட்! நீங்க உட்கார்ந்து வேலை பாருங்க... நான் இன்னும் அரைமணி நேரத்துல... ஒரு ஃபார்மல் என்கொய்ரியை நடத்திட்டு கிளம்பறேன்... இங்கே மில்லுல நல்ல காபி கிடைக்குமா?"

"கிடைக்கும்."

"ஐ...டி. ஆபீசுக்கு அனுப்பி வையுங்க..."

சொன்ன அகர்வால் சிரித்துக் கொண்டே அறைக்கதவை நோக்கி நடந்தார்.

## 3

டாக்டர் பஞ்சவர்ணம் சில விநாடிகளை யோசிப்பில் செலவழித்துவிட்டு பரணியை ஏறிட்டார்.

"பரணி! நியாயமான காரியங்களுக்கு நான் என்னிக்குமே உதவத் தயார். அந்த மூணு பேர் யார்...? அவங்களால உங்களுக்கு என்ன பாதிப்பு...? இந்த கேள்விகளுக்கு நீங்க உண்மையான



பதில்களைச் சொன்னா... மனப்பூர்வமா என்னால உங்களுக்கு உதவ முடியும்...! இந்த விஷயத்துல நீங்க எனக்குக் கொடுக்கப் போகிற பணம் ரெண்டாம் பட்சம்தான்."

பரணி அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டான். "டாக்டர்! அந்த மூணுபேர் யார்ங்கிற உண்மையை உங்ககிட்ட சொன்னா நீங்க ஒத்துழைப்புக் குடுப்பீங்களா?"

"நீங்க சொல்ற காரணம் நியாயமானதாயிருந்தா... கண்டிப்பா என்னோட ஒத்துழைப்பு கிடைக்கும்."

"நியாயமான காரணம் தான் டாக்டர். அந்தக் காரணத்தைச் சொன்னா உங்களுக்கு கோபம் வரும்..."

"சொல்லுங்க... பார்ப்போம்..."

"என்னோட லிஸ்டில் இருக்கிற மூணு பேரில் முதல் ஆள் ஒரு ஆபீசர். ஃசீப் இன்கம்டாக்ஸ் ஆபீசர். பேரு அகர்வால். சொந்த ஊர் நாக்பூர். நம்ம ஊருக்கு சீஃப் இன்கம்டாக்ஸ் ஆபீஸரா... பதவிக்கு வந்து ஒரு வருஷந்தான் ஆகுது. ஆள் பயங்கரமான ஊழல் பேர்வழி. பணத்தை அடிப்பதில் கில்லாடி. ஊர்ல இருக்கிற பிஸினெஸ்மென்களில் யார் யார்கிட்டே பிளாக்மணி இருக்குன்னு மோப்பம் பிடிக்கிறதுல மன்னன், போன மாசம் என்கிட்டேயும் வந்தான். வந்த பத்து நிமிஷத்திலேயே என்னைத் தனியா தோட்டத்துப் பக்கம் கூட்டிட்டுப் போய் பேரம் பேசினான். நான் மசியலை. ரெய்டு பண்ணி தொழிலை முடக்குவேன்னு மிரட்டினான். எனக்கு உள்ளூர பயம் வந்தது. சொல்றபடி செய்யக்கூடிய ஆள்ங்கிறதும் எனக்கு தெரிஞ்சுது. கடைசியில பணம் தர்றதா ஒத்துக்கிட்டேன்."

"எவ்வளவு?"

"ஆறுலட்சம்..."

"மைகாட்..."

''அந்த பாவி அகர்வால்... ஆறு லட்சமே கம்மின்னு சொன்னான்.''

''ரெய்ட் பண்ணுன்னு நீங்க சொல்ல வேண்டியதுதானே...?''

''அப்படி என்னால தைரியமா சொல்ல முடியாத நிலைமை. அக்கவுண்ட் செக்ஷன்ல நிறைய குளறுபடி இருக்கு. பிசினஸ்ல நானும் என்னோட பார்ட்னர் கருணாகரனும் நிறைய வரி ஏய்ப்பு பண்ணியிருக்கோம். அந்த அகர்வால் அதையெல்லாம் கிளற ஆரம்பிச்சானா... நான் ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான்.''

''உங்க பார்ட்னர், கருணாகரன் என்ன சொல்றார்...?''

''பணத்தை குடுத்துடலாம்னு சொன்னார். ஆனா எனக்கு அதில் இஷ்டமில்லை. ராத்திரியும் பகலுமா பிசினஸை கவனிச்சு... சம்பாதிச்ச பணத்தை... அந்த அகர்வாலுக்கு கொட்டிக் கொடுக்க நான் தயாராயில்லை... டாக்டர் அந்த அகர்வால்கிற அட்டைப்பூச்சி என்னை மட்டுமில்லை... இந்த ஊர்ல இருக்கிற... எல்லா பிசினஸ்மென்களையும் உறிஞ்ச ஆரம்பிச்சிருக்கு. மத்தவங்க இதுல பாதிக்கப்படாம இருக்கலாம். ஆனா நான் பாதிக்கப் பட்டிருக்கேன். ஆறு லட்ச ரூபாயை அகர்வாலுக்கு கொடுத்தா என்னால பிசினஸை நடத்த முடியாது. பணத்தைக் கொடுக்காமப் போனாலும்... ரெய்ட்ங்கிற போர்வையில் என்னோட பிசினஸைப் பாழ் பண்ணிடுவான் அந்த அகர்வால். ஸோ நான் அவனுக்கு ஒரு முடிவு கட்டினாத்தான் என்னால பிசினஸை நடத்த முடியும்.

டாக்டர் பஞ்சவர்ணம் கவலையாய் மோவாயைத் தாங்கினார். ''அந்த அகர்வாலுக்கு இப்ப என்ன பதிலைச் சொல்லியிருக்கீங்க...''

''ஒரு மாசத்துக்குள்ளே பணத்தை தர்றதா சொல்லியிருக்கேன். என்ன பண்றதுங்கிற யோசனையில் பத்துநாள் ஓடிப்போச்சு. இன்னும் இருபது நாள்ல அந்த அகர்வால் கொடுத்த அவகாசம் முடியப் போகுது. அந்த அவகாசம் முடியறதுக்குள்ளே நான் அவனை முடிக்கணும்...''



பஞ்சவர்ணம் மெல்லிய குரலில் சொன்னார்.

''இந்த பிரச்னையை வேறு விதமாகவும் தீர்க்கலாமே பரணி!''

''எப்படி...''

''லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பாளர் கிட்ட தகவல் கொடுத்து... இந்த அகர்வால் என்கிற எலியைப் பொறிவச்சுப் பிடிக்கலாமே.''

பரணி சிரித்தான்.

''அகர்வால் எலியில்லை டாக்டர். அவன் ஒரு கரடி. எல்லா அரசியல் கட்சி தலைவர்கள் கிட்டவும் அவனுக்கு செல்வாக்கு உண்டு. காபினட்ல இருக்கிற முக்கியமான நாலைஞ்சு மந்திரிகளுக்கு ரொம்பவும் வேண்டப்பட்டவன். எந்தப் புகாரும் இவனை எதுவும் பண்ண முடியாது. கிணத்துல கல் போட்டாக்கூட சத்தம் கேட்கும். அவன் மேலே புகார் எழுதிக் கொடுத்தா... அந்தப் புகார் போகிற வழியிலேயே... காணாமே போயிடும்...''

''அந்த அகர்வாலுக்கு வீடு எங்கே...?''

''சாயிபாபா காலனியில்.''

''அவருக்கு என்ன வயசிருக்கும்?''

''நாற்பத்தஞ்சிலிருந்து அம்பது வயசுக்குள்ளே.''

''ஒய்ப் குழந்தைங்க...?''

''ஒய்ப் ஈஸ் நோ... மோர்...! ஒரேயொரு பையன் மட்டும் அமெரிக்காவுல படிச்சிட்டிருக்கானாம்...''

''அப்போ... வீட்ல அவர் மட்டும்தான்...''

''ஆமா...! சமைச்சுப் போட ஒரெயொரு வேலைக்காரன் மட்டும் இருக்கான். அவனும் ராத்திரி நேரங்கள்ல வீட்ல தங்கறதில்லை...''

டாக்டர் பஞ்சவர்ணம் ஒரு நிமிட யோசனைக்குப் பின் நிமிர்ந்தார்.

''உங்க லிஸ்ட்ல இருக்கிற ரெண்டாவது நபர் யாரு...?''

பரணி பேச வாயைத் திறந்த விநாடி-

டெலிபோன் கிணுகிணுத்தது.

''எக்ஸ்க்யூஸ்மீ டாக்டர்...'' சொல்லி உடம்பை வலது பக்கமாய் சாய்த்து ரிஸீவரை எடுத்தான் பரணி.

''ஹலோ!''

மறுமுனையில் குரல் ஏளனமாய்ச் சிரித்தது.

''மிஸ்டர் பரணி! நான் அகர்வால்...''

''...''

## 4

நடிகை சுனந்தா நிருபர்களுக்கு மத்தியில் உட்கார்ந்து அவர்கள் வினவிய கேள்விகளுக்கு புன்னகையோடு பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''புதுப்படங்களுக்கு ஒத்துக்கிறதில்லையாமே... ஏன்?''

''இதுவரைக்கும் நடிச்சதே போதும்ன்னு நினைக்கிறேன்.''

''நடிக்கிறதை நிறுத்திட்டு என்ன செய்யப் போறதா உத்தேசம்...?''

''கல்யாணம்தான்...''

''காதல் கல்யாணமா...?''

''அநேகமா அப்படித்தான்...''



''அவர் யார்ன்னு நாங்க தெரிஞ்சுக்கலாமா...!''

''நேரம் வரும்போது நானே சொல்லுவேன்...''

''அவர் ஒரு நடிகர்தானே...?''

''பாம்பின் கால் பாம்பறியும்ன்னு சொல்லுவாங்க. நடிகரைக் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு எனக்கொண்ணும் புத்திகெட்டுப் போயிடலை.''

எல்லோரும் சிரித்தார்கள்.

''கல்யாணம் செய்து கொண்டதும் உங்களுடைய எதிர்காலத் திட்டம் என்ன?''

''ஒரு திட்டமும் இல்லை. குழந்தைகளைப் பெத்துக் கொண்டு சந்தோஷமாய் வாழ்க்கையை நடத்துவதுதான்.''

''திருமணத்திற்குப் பிறகு நடிக்க மாட்டேன் என்று சொல்லும் நடிகைகள் திருமணம் முடிந்த மறுநிமிடமே நடிக்க வருவதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீர்கள்...?''

''மறுபடியும் பணம் சம்பாதிக்கும் ஆசைதான். ஆனா நான் நிச்சயமா அப்படி வரமாட்டேன். நீங்க தாராளமா நம்பலாம்....''

''அப்படி வந்துட்டா...?''

சுனந்தா எல்லோரையும் பார்த்தாள். ''இங்கே ரிப்போர்ட்டர்ஸ் மொத்தம் எத்தனை பேர் இருக்கீங்க...?''

''ஏழு...பேர்...''

''அப்படி நான் மறுபடியும் வந்துட்டா... உங்க ஏழு பேருக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் பைன் கட்டிடறேன் போதுமா...?''

''ஷ்யூர்...''

''ஷ்யூர்...''

"சொறி பிடிச்சவன் கை சும்மாயிருக்காதுன்னு சொல்லுவாங்க.... நீங்க சொறிஞ்சுக்கப் போறீங்களா... சும்மாயிருக்கப் போறீங்க ளான்னு கல்யாணத்துக்குப் பின்னாடிதான் தெரியும்..."

"நிச்சயமா... நான் சொறிஞ்சுக்க மாட்டேன்."

"உங்க கல்யாணம் எப்போ இருக்கும்ன்னு சூசகமா சொல்ல மாட்டீங்களா...?"

சுனந்தா காலண்டரைப் பார்த்தாள்.

"இன்னிக்கு தேதி அஞ்சு. இன்னும் பதினைஞ்சு நாள் கழிச்சு இருபதாம் தேதி இதே நேரத்துக்கு வாங்க... கல்யாணம் நடக்கிற தேதியைக் கன்பார்மா சொல்றேன்..."

## 5

பரணிக்கு குரல் குழறியது.

"அ...அகர்வால்..."

"எஸ்... நானேதான்...! டெலிபோன் முதல் ரிங் கொடுத்ததுமே... ரிஸீவரை எடுத்துட்டீங்களே....? தூக்கம் வராமே உட்கார்ந்துட்டிருந் தீங்களா...?"

"..."

அகர்வால் மறுபடியும் சிரித்தார்.

"தூக்கம் வராதுதான்! நான் கொடுத்த கெடுவில இன்னும் இருபது நாள்தான் மிச்சமிருக்கு! இந்த இருபது நாள்ல பணத்தை ரெடி பண்ணிடுவீங்கள்ல?"

"ம்...ம்"

"என்ன பேச்சுல சுரத்தையே காணோம்...?"



"உங்களுக்கும் ஒரு கஷ்டம் வரும்போது... பேச்சுல சுரத்து இருக்காதுதான். இப்ப எதுக்காக போன் பண்ணியிருக்கீங்க...?"

"ரிமைண்ட் பண்ணத்தான்..."

"நீங்க ரிமைண்ட் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு தூங்கற நேரம் தவிர மத்த எல்லா நேரமும் உங்க ஞாபகம்தான். இன்னும் இருபது நாள்ல நீங்க கேட்ட பணத்தைக் குடுத்துடறேன்..."

"இந்த உறுதிமொழி போதும். ரிஸீவரை வெச்சுடட்டுமா? குட்நைட்...?" அகர்வால் ரிஸீவரை வைத்ததும் பரணியும் ரிஸீவரைக் கோபமாய் சாத்திவிட்டு டாக்டர் பஞ்சவர்ணத்திடம் திரும்பினான். அவர் கேட்டார்.

"போன்ல யாரு... அகர்வாலா...?"

"அதே கொள்ளைக்காரன் தான்..."

"இவ்வளவு பகிரங்கமா... போன் பண்ணி லஞ்சம் கேக்கறானே...?"

"உடம்பு பூராவும் அவ்வளவு திமிர். இப்ப சொல்லுங்க... டாக்டர்... நான் இவனோட கதையை முடிக்க நினைச்சது தப்பா...? உங்க டாக்டர் பாதையில் சொல்லப் போனா இவன் ஒரு புற்றுநோய்... இந்தப் புற்றுநோயை அழிக்கணுமா வேண்டாமா?"

"அழிக்கணும்..."

பரணி மலர்ந்தான்.

"நீங்க சொன்ன இந்த வார்த்தை போதும் டாக்டர். மத்ததை நான் பாத்துக்குவேன்" சொல்லிக் கொண்டே ஸ்காட்ஸ் பாட்டிலைச் சாய்த்து டாக்டரின் கையிலிருந்த டம்ளரில் விஸ்கியை ஊற்றினான் பரணி. அவர் மறுக்காமல் பரணியை ஏறிட்டார்.

"லிஸ்ட்ல இருக்கிற ரெண்டாவது நபர் யாரு...?"

"அது ஒரு பெண்..."

"யாரு..."

"ஆக்ட்ரஸ் சுனந்தா..."

"அவளாலே உங்களுக்கு என்ன ப்ராப்ளம்...?"

"டாக்டர் சுனந்தாவை நான் ஆறுமாசத்துக்கு முன்னாடி மெட்ராஸ் போயிருந்தபோது கோல்டன் பீச்சுக்குப் பக்கத்துல சந்திச்சேன். ஏதோ ஒரு தெலுங்குப்பட சூட்டிங்குக்கு போயிட்டிருந்த அவளோடு கார் மக்கர் பண்ணி ரோட்டோரமா நின்னுட்டிருந்தது. நான் காரை நிறுத்தி லிப்ட் கொடுத்த பாவம்... ஒட்டிக்கிட்டா... மறுநாள் தங்கியிருந்த ஹோட்டலுக்கே வந்து பேசினா. வீட்டுக்கு... வாங்கன்னு கூப்பிட்டா... போனேன். ஸ்காட்ச் ஊத்திக் கொடுத்து தப்பு பண்ண தூண்டினா. நானும் தப்பு பண்ணினேன். அதுக்கப்புறம் நான் மெட்ராஸ் வரும் போதெல்லாம்... சுனந்தாவை என்னால தவிர்க்க முடியலை. நான் ஒரு மாசம் மெட்ராஸ் போகாம... பிசினஸ் பிஸியா இருந்தப்ப சுனந்தாவே என்னைத் தேடிக்கிட்டு வந்துட்டா..."

டாக்டர் பஞ்சவர்ணம் தலையை மையமாய் ஆட்டி லேசான போதையோடு பரணி சொல்வதைக் கேட்டுக் கொண்டே வந்தார். பரணி தொடர்ந்தான்.

"என்னால சுனந்தாவை அவாய்ட் பண்ண முடியலை. சுனந்தாவும் என்னை சந்திக்கிறதுக்கு வசதியா... இதே ஊர்ல ஒரு பங்களாவை வாங்கி வாரத்துக்கு ஒரு தரம் மெட்ராஸிலிருந்து கோயமுத்தூர் வந்து தங்க ஆரம்பிச்சா. நானும் அவளை ரகசியமா சந்திக்க ஆரம்பிச்சேன்.

"இட்ஸ்...ஓ...கே! அந்த சுனந்தாவாலே இப்போ உங்களுக்கு என்ன ப்ராப்ளம்...?"

"ப்ராப்ளத்துக்கு வந்துட்டேன் டாக்டர்! போன மாசம் கோயமுத்தூர் வந்த சுனந்தா... தான் கர்ப்பமா இருக்கிறதா... ஒரு



குண்டைத் தூக்கிப் போட்டா. அந்த கர்ப்பம் வெளியே தெரியறதுக்கு முந்தி கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொன்னா...! நான் அப்படியே இடிஞ்சு போயிட்டேன்..."

பஞ்சவர்ணம் போதையோடு புன்னகைத்தார். "ஒரு பொண்ணுக்கிட்டே தப்பா பழகினா.. அவ கர்ப்பமாக மாட்டாளா... என்ன...? தப்பு உங்க பக்கம்தான்..."

"நோ... டாக்டர்... தப்பு எம்பேர்ல இல்லை..."

"தப்பு உங்க பேர்ல இல்லையா... வாட் டூ யூ மீன்?"

"எஸ் எம்பேர்ல எந்தத் தப்பும் கிடையாது. எனக்கும் கிருபாவுக்கும் கல்யாணமாகி எத்தனை வருஷம் இருக்கும் டாக்டர்...?"

"ரெண்டு வருஷம்..."

"இந்த ரெண்டு வருஷமா... கிருபா... மாசந்தவறாமே சரியான தேதிகள்ல அந்த 'மூணு' நாளை மீட் பண்ணியிருக்கா... ஐ.மீன்... அவ கன்சீவே ஆகலை... ஆகவும் மாட்டா."

"பரணி நீங்க என்ன சொல்ல வர்றீங்க...?"

"டாக்டர்! நீங்க என்னோட பேமிலி டாக்டர். இருந்தாலும் உங்ககிட்டே கூட நான் இந்த விஷயத்தை சொன்னதில்லை. ரெண்டு வருஷமா கிருபா கன்சீவ் ஆகாததினாலே லாலி ரோட்டில் இருக்கிற கைனோலாஜிஸ்ட் டாக்டர் வர்மாவை ரெண்டு மாசத்துக்கு முந்திப் பார்த்தேன். அவர் என்னைப் பூர்ணமா பார்த்துட்டு ஒரு அதிர்ச்சி யான முடிவைச் சொன்னார். நான் எந்தப் பெண்ணையுமே தாயாக்க முடியாதாம். ஒரு பெண்ணை உறவு கொள்வதின் மூலம் அவளைத் திருப்தியடையச் செய்யலாம்... ஆனால் அவளைத் தாயாக்க முடியாது...ன்னு டாக்டர் வர்மா ஆணித்தரமா சொல்லிட்டார்."

பஞ்சவர்ணம் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தார்.

"அப்போ... சுனந்தாவோட கர்ப்பம்...?"

''வேற யாரோ ஒருத்தரோட உபயம்...''

''ஆனா... சுனந்தா... அவளோட கர்ப்பத்துக்கு காரணம் நீங்கதான்னு சொல்றா...''

''ஆமா''

''உங்ககிட்டே இருக்கிற இந்தக் குறையை அவகிட்டே சொன்னீங்களா?''

''சொல்லலை...''

''ஏன் சொல்லலை...''

''என்னோட அந்தக் குறையை பகிரங்கப்படுத்த நான் விரும்பலை...''

''உங்களுக்கு கல்யாணமாகி மனைவி இருக்கிறது தெரியுமா?''

''தெரியும்... அதை அவ பொருட்படுத்தலை. உங்களுக்கு நான் ரெண்டாவது மனைவியா வாழ்க்கைப்படத் தயார்ன்னு சொல்லிட்டா. நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவ கேட்கலை. இந்த மாசம் இருபதாம் தேதி வரைக்கும் டைம் கொடுத்திருக்கா... நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம் தரலைன்னா... பிரஸ் ரிப்போர்ட்டர்ஸைக் கூப்பிட்டு... எனக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பை அம்பலப்படுத்தி விடுவாளாம். தான் கர்ப்பமா இருக்கிறதைச் சொல்லி... அதுக்குக் காரணம் நான்தான்ங்கிறதையும் சொல்லப் போறாளாம்...''

டாக்டர் பஞ்சவர்ணம் தன் நெற்றியைத் தேய்த்தார். ''சிக்கல்தான். ஒரு பாப்புலரான நடிகை தன்னோட கர்ப்பத்துக்கு காரணம் இவர்தான்னு ஒருத்தரைச் சுட்டிக்காட்டினா... அது ஒரு அணுகுண்டுக்கு சமம்...''

''அந்த அணுகுண்டு என்மேல வீசப்படறதுக்கு முந்தி நான் அவளை அழிச்சாகணும் டாக்டர். அந்த நாசக்காரியோட



கையில்தான் என்னோட மானம், மரியாதை எல்லாம் குற்றுயிரும் கொலையுயிருமா இருக்கு.''

''ஸோ... உங்க மானம், மரியாதை இதெல்லாம் காப்பாத்தப் படணும்னா உங்க லிஸ்ட்ல ரெண்டாவது இருக்கிற இவளைத் தீர்த்துக் கட்டியாகணும்...''

''ஆமா... டாக்டர்''

''இந்த ரெண்டாவது கொலையை நீங்க தவிர்க்கலாமே பரணி?''

''எப்படி...?''

''ஏதாவது ஒரு அமௌண்ட் பேசி... அவளைத் தொட்ட பாவத்துக்காக வீசி எறிஞ்சுடலாமே...?''

''அதைப் பேசிப் பார்த்தாச்சு! வேண்டிய பணம் என்கிட்டே இருக்கு. எனக்கு வேண்டியது நீதான்னு சொல்லிட்டா...''

''உங்களைக் கட்டிக்கணும்னு ஏன் இவ்வளவு பிடிவாதமா இருக்கா?''

''நான் கேள்விப்பட்ட காரணத்தை சொல்லட்டுமா டாக்டர்...''

''சொல்லுங்க...''

''சுனந்தா ஏற்கனவே நாலைஞ்சு தடவை அபார்ஷன் பண்ணியிருக்காளாம். கடைசியா பண்ணிக்கிட்ட போது... டாக்டரம்மா சிவியரா வார்ன் பண்ணியிருக்காங்க. இனியொரு தடவை அபார்ஷன்னு வந்தே பொணமா தான் வெளியே போவேன்னு சொல்லியிருக்கா. அதான் இப்ப வேற வழியில்லாமே தன்னோட கர்ப்பத்துக்கு என்னை அப்பனா நியமனம் பண்ணியிருக்கா. நாளைக்கு இவ பிரஸ் ரிப்போர்ட்டர்ஸை கூட்டி வெச்சு... அவ வயத்துல வளர்ற குழந்தைக்கு நான்தான் அப்பன்னு சொன்னா... அந்த அதிர்ச்சியை கிருபா தாங்கிக்க மாட்டா டாக்டர். அவ தன்னை நிச்சயமா அழிச்சுக்குவா...! என்னோட கிருபா

உயிரோடு இருக்கணும்ன்னா... அந்த சுனந்தா உயிரோடு இருக்கக் கூடாது... என் மானம் மரியாதை, கிருபாவோட உயிர் எல்லாமே காப்பாற்றப்படணும்ன்னா... என்னோட லிஸ்டில் ரெண்டாவதா இருக்கிற சுனந்தாவோட கணக்கு முடிக்கப்பட வேண்டியது அவசியம். நீங்க என்ன நினைக்கிறீங்க டாக்டர்...!''

''அவசியம்தான்...'

## 6

பில்லியர்ட்ஸ் கிளப் நேரம் இரவு 11.30

அகர்வால் கூடை நாற்காலியில் சாய்ந்து - காம்படீட்டர்ஸ் ஜெய்மோகனும் அரியானா பிரதீப்சிங்கும் விளையாடுவதை உன்னிப்பாய் பார்த்துக் கொண்டிருக்க க்ளப் அட்டெண்டர் அவருக்கு பின்பக்கமாய் வந்துநின்று பவ்யமாய் குனிந்தான்.

''ஸார்...''

''என்ன பழனிச்சாமி...?''

''உங்களுக்கு போன் ஸார்...''

''போன்ல யார்ன்னு சொன்னாங்க...?''

''ஒண்ணும் சொல்லலை... ஸார்...''

அகர்வால் எழுந்தார். சபாரி ஃபாண்ட்டை தூக்கி விட்டுக் கொண்டே டெலிபோன் இருந்த அறையை நோக்கிப் போனார். அறை வெறிச்சோடிக் கிடக்க மேஜையின் மேல் அனாதையாய் விழுந்திருந்த ரிஸீவரை எடுத்து உதட்டுக்கும் காதுக்கும் கொடுத்தார்.

''ஹலோ...''



''மிஸ்டர் அகர்வால்?''

''எஸ்... ஹோல்டிங்...''

''ஸார் தேவராஜ்...''

''ஓ...! நீங்களா? உங்க வீட்டுக்கு இப்பத்தான் ஒரு பத்து நிமிடத்துக்கு முன்னாடி போன் பண்ணியிருந்தேன். நீங்க வெளியே போயிருக்கிறதா சொன்னாங்க.''

''ஸாரி... ஸார். நான் ஒரு ஃபிரெண்டை பார்க்கிறதுக்காக சிங்காநல்லூர் வரைக்கும் போய்ட்டு இப்பத்தான் வர்றேன்.''

''தேவராஜ்! பரணிக்கு கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் போன் பண்ணினேன். ஆள் அரண்டு போயிருக்கான்.''

''பணம் தர்றதா சொன்னானா ஸார்!''

''இன்னும் இருபது நாளுக்குள்ளே தந்துடறானாம்...''

''அவன் விஷயத்துல நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும் ஸார். இன்னொரு பார்ட்னர் கருணாகரனைக் காட்டிலும் அவன் புத்திசாலி. பயப்படற மாதிரி காட்டிக்கிட்டே அண்டர்க்ரௌண்ட்ல வேலை பண்ணிடுவான்.''

''என்கிட்டே எதுவுமே பலிக்காது தேவராஜ். சென்ட்ரல் கவர்மெண்ட்ல இருக்கிற சிங்கங்களே என்னைப் பார்த்தா 'மியாவ்'ன்னு கத்தும். இந்தப் பரணி நிஜமான பூனை. இவனாலே என்ன பண்ண முடியும்?''

''எதுக்கும் கொஞ்சம் எச்சரிக்கையா இருந்துக்குங்க ஸார்...''

அகர்வால்... கடைவாயில் கட்டியிருந்த தங்கப்பல் தெரிய சிரித்தார். ''எச்சரிக்கையா இருக்க வேண்டியது நானில்லை... தேவராஜ், பரணிதான். அவன் எந்த வகையிலும் என்னை ஏமாத்த முடியாது. அப்படி ஏமாத்த நினைச்சா... அவன்தான் ஏமாந்து போவான்.''

# 7

“உங்க லிஸ்ட்ல இருக்கிற மூணாவது ஆள் யார் பரணி?” டாக்டர் பஞ்சவர்ணம் நான்காவது ரவுண்ட் ஸ்காட்ச்சை முடித்துக் கொண்டதும் கேட்டார்.

பரணி சொன்னான்.

“அவன் ஒரு நம்பிக்கை துரோகி.”

“யாரு?”

“தேவராஜ்...”

“யூ...மீன்... உங்க கம்பெனி ஆடிட்டர் தேவராஜ்.”

“அந்த அயோக்கிய ராஸ்கல்தான்.”

“தேவராஜ்... ஒரு லாயல் பர்சன். அவர் எப்படி உங்களுக்கு ப்ராப்ளமா மாறினார்.”

“அகர்வாலுக்கு என் கம்பெனியில உண்மையான கணக்கு வழக்குகளைப் பற்றி தகவல் சொன்னதே தேவராஜ்தான்.”

“மைகுட்னஸ்! நிஜமா...?”

“அப்பட்டமான நிஜம்.”

“உங்களுக்கு எப்படித் தெரியும்?”

“எனக்கும் என்னோட பார்ட்னர் கருணாகரனுக்கும் ஆடிட்டர் தேவராஜூக்கும் மட்டுமே தெரிந்த சில ரகசிய தஸ்தாவேஜு கணக்குகள் அகர்வாலுக்கு தெரிஞ்சிருக்கு. அவர் அதை என்கிட்டே மனப்பாடம் செஞ்ச மாதிரி ஒப்புவிக்கிறார். நானோ... கருணாகரனோ... அகர்வாலுக்கு அந்தக் கணக்குகளைப் பற்றிச்



சொல்ல நியாயமில்லை. நாங்க சொல்லலைன்னா வேற யார் சொல்லியிருக்க முடியும்? செண்ட் பர்செண்ட் தேவராஜ்தான். என்னோட சந்தேகத்துக்கு இன்னொரு காரணம் அகர்வால் என்னோட கம்பெனியை ரெய்ட் பண்ண வந்தபோது தேவராஜுக்கு போன் பண்ணினேன். அவன் வீட்ல இல்லை. ஜூனியர் யாரோ பேசினான். தேவராஜ் தன் சொந்த ஊரான ஸ்ரீவில்லிபுத்தூருக்கு போயிருக்கிறதா சொன்னான். ஆனா அன்னைக்கு சாயந்தரமே தேவராஜை அன்னபூர்ணா ஹோட்டல்ல பார்த்தேன். இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த ஒரு நபர்கூட சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்தான்.”

“குட்... அலிபி...”

“எனக்குப் பட்டவர்த்தனமா விளங்கிடுச்சு டாக்டர். அகர்வால் இவ்வளவு தைரியமாய் ரெய்டு பண்ண வந்ததுக்கு காரணமே... இந்த தேவராஜ் தான். அகர்வால் கொடுக்கப் போகிற கமிஷன் பணத்துக்கு ஆசைப்பட்டுகிட்டு... என்னைக் காட்டிக் கொடுத்திருக்கான். கட்டுச் சோத்துக்குள் எலியை வெச்சுக் கட்டின மாதிரி... கம்பெனியில் இவன் இருக்கிறது நியாயமா டாக்டர்? இவனைக் கொத்தி எறிய வேண்டாமா?”

“தேவராஜை எதுக்காக கொல்லணும்... பரணி! அவனை ஆடிட்டிங் போஸ்ட்டிலிருந்து டிஸ்மிஸ் பண்ணிடுங்க...”

“அவனைப் போஸ்ட்டிலிருந்து டிஸ்மிஸ் பண்றது ரொம்ப ரொம்ப சுலபம் டாக்டர். ஆனா எங்க கம்பெனியோட எல்லா ரகசிய தஸ்தாவேஜுகளும் அவனுக்கு அத்துப்படி. நாளைக்கு அந்த அகர்வால் போய் அந்தப் போஸ்ட்டுக்கு வேற எந்த ஆபீசர் வந்தாலும் தேவராஜ் எங்க கம்பெனி ரகசிய தஸ்தாவேஜுகளைப் பற்றி அவர்கிட்டே சொல்வான். புதுசா வர்ற அந்த ஆபீசரும் அதை சாக்குக் காட்டி எங்களை மிரட்டுவான். அவனும் லட்ச லட்சமாய் லஞ்சம் கேப்பான். இது தொடரணுமா டாக்டர்? தேவராஜை வேலையிலிருந்து டிஸ்மிஸ் பண்றதைக் காட்டிலும்

உலகத்திலிருந்தே டிஸ்மிஸ் பண்றதுதான் உத்தமம். நீங்க என்ன நினைக்கிறீங்க டாக்டர்...?''

''நானும் அதையேதான் நினைச்சிட்டிருக்கேன்...''

''லிஸ்ட்ல இருக்கிற மூணு புல்லுருவிகளையும் அழிக்க எனக்கு உதவி பண்றீங்களா டாக்டர்...''

''பண்றேன்... ஆனா...''

''ஆனா...?''

''உங்களை ஹாஸ்பிடல்ல வெச்சு... ட்ரீட்மெண்ட் கொடுக்கிற மாதிரி பாவ்லா பண்ற உதவியைத்தான் என்னால் பண்ண முடியும். உங்ககூட வெளியே வந்து ஆட்களைத் தீர்க்கற வேலையை நான் பண்ணமாட்டேன்.''

''அந்த வேலையை நான் பார்த்துக்கிறேன் டாக்டர். நீங்க எனக்கு ட்ரீட்மெண்ட் தர்ற மாதிரி பாவ்லா காட்டினா போதும். நான் ராத்திரி நேரங்களில் வெளியே போயிருக்கும் போது... ஹாஸ்பிடல் ரூமுக்குள்ளே யாரும் நுழைஞ்சுடாதபடி பார்த்துக்க வேண்டியது உங்க பொறுப்பு.''

டாக்டர் பஞ்சவர்ணம் புன்னகைத்தார்.

''அந்தப் பொறுப்பு என்னைச் சார்ந்தது. திட்டம் என்னிக்கு ஆரம்பமாகுது?''

''நீங்க உம்'ன்னு சொன்னா நாளைக்கு ராத்திரியே...''

''உம்...''

பரணி சிரித்தான்.

''திட்டத்தை இன்னொரு தடவை சொல்லட்டுமா டாக்டர்?''

''ப்ளீஸ்...''

பரணி சொல்ல ஆரம்பித்தான்.



# 8

விவேக்கும் ரூபலாயும் நீலகிரி எக்ஸ்பிரஸ்ஸிலிருந்து இறங்கி ஆட்டோ பிடித்து சாயிபாபா காலனியில் இருக்கும் நண்பன் ராஜேந்திரன் வீட்டுக்கு போய்ச் சேர்ந்த போது கோவையில் கிழக்கு திசை இருட்டு முக்காட்டை அவிழ்த்திருந்தது. ராஜேந்திரன் லானுக்குப் பக்கத்தில் வாய் நிறைய பற்பசை நுரையோடு ''வாழா...''என்றான். ரூபலாவைப் பார்த்து ''வாழ்ங்க... லிஸ்டர்!'' என்றான்.

விவேக் ரூபலாவை திரும்பிப் பார்த்து சொன்னான். ''தப்பா நினைக்காதே ரூபி! ராஜேந்திரன் எப்பவுமே வாய் நிறைய வரவேற்பான்.''

''போடா!'' விவேக்கின் தோள்பட்டையில் குத்திய ராஜேந்திரன் காம்பவுண்ட் ஓரமாய் பற்பசை நுரையைத் துப்பிவிட்டு வந்தான். கோபித்துக் கொண்டான். ''என்னடா! திடீர்னு தம்பதி சமேதரா வந்து நிக்கறே...?'' ஒரு போன் அடிச்சிருந்தா... ஸ்டேஷனுக்கு காரைக் கொண்டு வந்திருப்பேனே...?''

''உன்னோட பழைய டப்பா காரை எங்கே ஸ்டேஷனுக்கு கொண்டு வந்துடுவியோன்னு பயந்துதான் போன் பண்ணாமே வந்தோம்...''

ராஜேந்திரன் முறைக்க ரூபலா சிரித்தபடியே சொன்னாள். ''தப்பா நினைச்சுக்காதீங்க அவர் சும்மா சொல்றார். நேத்திக்கு உங்களை கான்டாக்ட் பண்ண எவ்வளவோ முற்சி பண்ணினோம். லைன் கிடைக்கலை...''

''அதானே பார்த்தேன்.''

''உள்ளே போலாமா...?''

"வா... வா!" ராஜேந்திரன் உள்ளே கூட்டிப் போனான். "என்ன... திடீர்னு கோயமுத்தூர் பக்கம்...?"

"ரெண்டு நாள் உன்னோட விருந்தாளி. ரெண்டு நாள் ஊட்டியில் இருக்கிற போஜராவ் வீட்ல தங்கல். ஒருநாள் முதுமலை பாரஸ்ட்... அப்படியே மைசூர், பெங்களூர்."

"என்ன இவ்வளவு ஹாய்யா...?"

"நாட்ல குற்றம் குறைஞ்சிடுச்சின்னு நினைச்சு சந்தோஷப் பட்டுடாதே. டிபார்ட்மெண்டிலிருந்து நானாகவே லீவைப் பிடுங்கிட்டு வர்றேன்..." சூட்கேஸை டீபாயின் மேல் வைத்துவிட்டு சோபாவுக்கு சாய்ந்தான் விவேக். ரூபலா பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். ராஜேந்திரனை ஏறிட்டுக் கொண்டே கேட்டாள்.

"நீங்க எப்பத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க?"

"பொண்ணு பார்த்தாச்சு..."

"அட! பொண்ணு யாரு...?"

"மாமா பொண்ணு பரிமளம்தான்."

விவேக் ஆச்சரியப்பட்டான்.

"அந்தப் பொண்ணைத்தான்... பிடிக்கலைன்னு சொல்லிட்டிருந் தீங்க...?"

"வேற வழியில்லை. பொண்ணு அழகா இருந்தா... அவளுக்கு என்னைப் பிடிக்கறதில்லை. அதான் என்னோட பர்சனாலிட்டிக்கு ஏற்ற மாதிரி... முன்னாடி வேண்டாம்ன்னு சொன்ன பொண்ணேயே கல்யாணம் பண்ணிக்க தலையை ஆட்டிட்டேன். வர்ற ஆகஸ்ட்ல முகூர்த்தம். தேதி இன்னும் முடிவாகலை..."

"அட்வான்ஸ் கங்கிராட்ஸ்."

"தேங்க்யூ..."



"மொதல்ல வாயை கொப்பளிச்சுட்டு வாடா... ராஜேந்திரன் வேகவேகமாய்ப் போய் பாத்ரூம் வாஷ்பேஸினில் ஓங்காரம் பாடி வாயைக் கொப்பளித்து விட்டு வந்தான். விவேக் ஹால் ஜன்னல் அருகே நின்று கர்ட்டனை இழுத்து வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன விவேக்... காப்பி போடட்டுமா?"

"வேண்டாம் டீ போடு..."

"டீயா...? காலையில நீ காப்பிதானே சாப்பிடுவே..."

"ஆமா..."

"பின்னே டீ போடச் சொல்றே...?"

"நீ டீ போட்டாத்தான் காப்பி மாதிரி இருக்கும். அதான் அப்படிச் சொன்னேன்.

"உனக்கு காப்பியும் கிடையாது. டீயும் கிடையாது. சிஸ்டர்க்கு மட்டும் என் கையாலே... அருமையான டிகிரி காப்பி போட்டுத் தருவேன்..." சொல்லிக் கொண்டே கோபமாய் வெளியேற முயன்ற ராஜேந்திரனை விவேக் கூப்பிட்டான்.

"டேய் ஒரு நிமிஷம்"

"என்னடா...?"

"போன தடவை வந்தப்போ... பக்கத்துவீடு பாழடைஞ்ச மாதிரி கிடந்தது. இப்ப பார்த்தா பங்களா மாதிரி இருக்கே...? அங்கே யார் இருக்கா...?"

"அகர்வால்"

"அகர்வாலா...?"

"ஆமா...! இன்கம்டாக்ஸ்ல பெரிய ஆபீசர். ஆறு மாசத்துக்கு முன்னாடிதான் அந்தப் பாழடைஞ்ச வீட்டை வாங்கினார். மூணே

மாசத்துல பணத்தைக் கொட்டி அழகான பங்களாவா மாத்திட்டார். மனுஷனுக்குப் பெண்டாட்டி கிடையாது. ஒரே பிள்ளை அவனும் அமெரிக்காவில் இருக்கானாம்...''

விவேக் அந்த பங்களாவையே வைத்த பார்வை வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

## 9

இரவு பதினோரு மணி.

பரணி டாக்டர் பஞ்சவர்ணத்தோடு டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தான். தாழ்ந்த குரல். ''டாக்டர்! நான் சரியா 11.30க்கு கிளம்பி - என்.எச். ஃபார்ட்டி செவன் ஹைவேசுக்கு வர்றேன். நீங்க இப்பவே கிளம்பிப் போய் - கருமுத்தம்பட்டிக்கு பக்கத்துல - காரை நிறுத்திக்குங்க.''

''நானும் கிளம்பிட்டே இருக்கேன்.''

''சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கா டாக்டர்?''

''நல்லாவே இருக்கு...''

''ஓ.கே... நீங்க கிளம்புங்க...'' பரணி ரிஸீவரை வைத்துவிட்டு இன்டர்காமில் கீழே இருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டான்.

''பாபுமணி! கொஞ்சம் மேலே வா...''

அவன் வந்ததும் சொன்னான். ''இன்னும் அரைமணி நேரத்துல நான் சேலம் புறப்பட்டு போறேன். வீட்டைப் பத்திரமா பாத்துக்க... நாளைக்கு காலையில அம்மா ஊரிலிருந்து வந்தா... நான் சேலம் போயிருக்கிறதா சொல்லிடு.''

''சரிங்கய்யா...''



''அந்த ஸ்காட்ச் பாட்டிலையும் டம்ளரையும் கொண்டு வந்து டீபாய் மேல வெச்சுட்டு... நீ கீழே போயிடு...''

பாபுமணி அவர் அலமாரிக்குப் போய் ஸ்காட்ச் பாட்டிலையும் டம்ளரையும் - ஐஸ்க்யூப்ஸ் இருந்த பிளாஸ்க்கையும் எடுத்து வந்து டீபாயின் மேல் வைத்துவிட்டு நகர்ந்தான்.

பரணி ரவுண்ட்ஸை ஆரம்பித்தான்.

நான்கு லார்ஜ்களை உள்ளே தள்ளி - ஒரு சான்ஸலர் சிகரெட்டையும் புகையாக்கி முடித்த போது மணி 11.30.

போதையோடு எழுந்தான் பரணி. சோபாவின் இடது பக்கமாய் வைத்திருந்த... ப்ரீப்கேஸை கையில் எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ஐந்தடி எடுத்து வைத்திருப்பான்.

டெலிபோன் கூப்பிட்டது.

நின்று எரிச்சலாய் திரும்பிப் பார்த்தான்.

''இந்த நேரத்திற்கு யார் போனில்?''

மெதுவாய் நடந்து போய் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''பரணி! நான் சுனந்தா...''

பரணி ஸ்பஷ்டமாய் திடுக்கிட்டான்... ''நீ... நீயா?''

''எனக்குத் தெரியும் நீங்க... என்னை எதிர்பார்த்திருக்க மாட்டீங்க...! பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் கோயமுத்தூர் வந்து சேர்ந்தேன். ஆமா தூங்கிட்டிருந்தீங்களா?''

''இ... இல்லை... வெளியே கிளம்பிட்டிருக்கேன்.''

''வெளியேன்னா... எங்கே?''

"வெளியூர்... சேலம்..."

"இந்த மாதிரி நேரத்துல சேலமா? எதுக்கு?"

"நாளைக்கு காலையில ஆறுமணிக்கு அங்கே ஒரு முக்கியமான மேரேஜ் அதை அட்டெண்ட் பண்ணத்தான்."

"இங்க வந்து என்னைப் பார்த்துட்டுப் போகக்கூடாதா?"

"நேரமில்லை."

"நேரமில்லையா! மனமில்லையா...!"

"நீ எப்படி வச்சுக்கிட்டாலும் சரி..."

"சரி நம்ம கல்யாணத்தைப் பத்தி என்ன முடிவுக்கு வந்திருக்கீங்க...?"

"யோசிச்சு இன்னும் ஒரு வாரத்துல சொல்றேன்."

"அதுவரைக்கும் நான் கோயமுத்தூர்லதான் இருக்கப் போறேன்."

"இரு..."

"சேலம் போய்ட்டு எப்ப வருவீங்க...?"

"நாளைக்கு சாயந்தரம்."

"நாளைக்கு ராத்திரி வீட்டுக்கு வாங்க..."

"ம்..."

"ம்'ன்னா என்ன அர்த்தம்?"

"வர்றேன்னு அர்த்தம்..." ரிஸீவரை வைத்துவிட்டு தடதடவென்று மாடிப்படிகளில் இறங்கி போர்டிகோவில் நின்றிருந்த பியட் காருக்கு வந்தான். பாபுமணி ஒரு தாயின் விசுவாசத்தோடு பின்னாலேயே போனான்.

"பாபுமணி!"



"அய்யா..."

"நான் வெளியே கிளம்பினதும் காம்பவுண்ட் கேட்டை பூட்டிக்க. பின்பக்கம் கூண்டுல இருக்கிற அல்சேஷனை அவிழ்த்து விட்டுடு..."

"சரிங்கய்யா."

காரைக் கிளப்பினான் பரணி. காம்பவுண்ட் கேட்டுக்கு வெளியே வந்ததும் வேகம் பிடித்தான்.

கோவை நகரம் சுத்தமாய் தூங்கிப் போயிருந்தது. கொட்டாவி விட்ட ரோடுகளில் சோடியம் லேபரைஸ்ட் விளக்குகள் மட்டும் ஏராளமான வாட்ஸ்களில் மின்சாரத்தைத் தின்று கொண்டிருந்தது.

பீளமேட்டைத் தாண்டியபோது - நேரம் 11.40

சின்னியம்பாளையத்தை தொட்டபோது 11.45.

அரசூர் 11.45

கருமத்தம்பட்டிக்கு ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும் போது காரின் வேகத்தைக் குறைத்தான் பரணி. டாக்டர் பஞ்சவர்ணமும், அவனும் பேசி வைத்த பாலம் கண்ணுக்குத் தட்டுப்பட்டதும் அதன் ஓரத்தில் கொண்டு போய் நிறுத்தி கீழே இறங்கிக் கொண்டான். உள்ளே இருந்த ப்ரீப்கேஸைத் திறந்து - அவனுடைய க்ரூப் ரத்தம் கொண்ட அந்த நூறு மில்லி பாட்டிலை எடுத்துக் கொண்டபடி சுற்றும் முற்றும் பார்த்தான்.

ரோட்டின் இரண்டு பக்கமும் அமைதி.

எந்த திசையிலும் ஒரு பொட்டு வெளிச்சமில்லை.

பரணி காரின் டாஷ் போர்டைத் திறந்து ஃபோர்ஸெல் டார்ச் ஒன்றை எடுத்து... ரோட்டின் கிழக்கு திசையை நோக்கி வெளிச்சம் அடிக்க தொலைவில் சில நூறு கெஜ தூரத்தில் காரை நிறு...

டாக்டர் பஞ்சவர்ணமும் டார்ச்சை அடித்து அணை...

ரத்த பாட்டிலைத் திறந்து காரின் முன் சீட்டிலும், ஸ்ட்ரியங்கிலும் தன் உடம்பிலும் துளித் துளியாய் தெளித்தான். காலி பாட்டிலை பக்கத்திலே தெரிந்த கிணற்றில் வீசியெறிந்துவிட்டு காரின் முன்பக்கக் கதவுகளையும், பின்பக்கக் கதவுகளையும் திறந்த நிலையில் வைத்துவிட்டு பின்பக்கமாய் நின்று தள்ளினான்.

சரிவின் விளிம்பில் நின்றிருந்த கார் மெதுவாக அசைந்து மணலோடு வழுக்கி - சர்ரென்று கீழே இறங்கி...

எதிர்பட்ட புளியமரத்தின் அடித்திண்டில் தட்டென்று மோதிக் கொண்டு நின்றது. ஹெட்லைட்டுகள் ச்சலீரென்று சிதறின.

பரணி சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு...

காரி முன்சீட்டில் ஏறி...

ஸ்டீரியங்கின் மேல் கவிழ்ந்து படுத்துக் கொண்டான்.

அடுத்த சில நிமிடங்களில்...

டாக்டர் பஞ்சவர்ணத்தின் கார் வேகமாய் வந்து ரோட்டோரமாய் நின்றது. பஞ்சவர்ணம் கீழே இறங்கி ஓடிவந்தார்.

''பரணி'' குரல் கொடுத்தார்.

பரணி தலையை உயர்த்திப் புன்னகைத்தான்.

''எல்லாம் ஓ...கே... டாக்டர்! ஆக்ஸிடெண்டைப் பார்த்த ரெண்டு மூணு சாட்சி வேணும். ஏதாவது லாரி வந்தா நிறுத்துங்க...''

சொல்லும் போதே...

ஒரு லாரியின் உறுமல் சத்தம் மேற்கு பக்கத்திலிருந்து கேட்டது. பஞ்சவர்ணம் ரோட்டுக்கு போய் நின்று சில விநாடிகளுக்குப் பின் வந்த லாரியை நிறுத்த எட்டிப் பார்த்த டிரைவர் கேட்டான்.

''என்ன... ஸார்... ஆக்ஸிடெண்டா...?''

''பா



''கார்ல... எத்தின பேரு...?''

''ஒரே ஆள்தான்...''

''செத்துட்டானா?''

''உயிர் இருக்கு... எனக்கும் அவர் தெரிஞ்சவர்தான். ஆளை வெளியே எடுக்கணும்ன்னா மூணு பேராவது வேணும்... வர்றீங்களா?''

டிரைவரும் க்ளீனரும் லாரிகளினின்றும் கீழே குதித்து ஓடி வந்தார்கள். வலியால் துடிப்பது போல் ''பாவ்லா'' காட்டிக் கொண்டிருந்த பரணியைக் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியே இழுத்துப் போட்டு பஞ்சவர்ணத்தின் காருக்கு கொண்டு வந்தார்கள்.

## 10

இரண்டு கால்களிலும் கனமான பாண்டேஜ் கட்டுகளோடு பரணி கட்டிலில் படுத்திருக்க இன்ஸ்பெக்டர் ஒருவர் டாக்டர் பஞ்சவர்ணத்திடம் விசாரணை நடத்திக் கொண்டிருந்தார். காலை ஏழு மணி.

''விபத்து நடந்ததை நீங்க பார்த்தீங்களா டாக்டர்...''

''எஸ்... எனக்கு எதிரில் வலது பக்கமா வந்திருந்த கார் திடீர்னு இடது பக்கத்துக்கு வந்து சரிவுல இறங்கி புளிய மரத்து மேல மோதியதைப் பார்த்தேன்.''

''நீங்க எங்கே போய்ட்டு திரும்பிட்டிருந்தீங்க?''

''அவினாசியில இருக்கிற ஒரு ப்ரண்ட் வீட்டுக்கு போயிட்டு திரும்பிட்டிருந்தேன்.''

''மிஸ்டர் பரணிக்கு ரெண்டு காலிலேயும் முறிவு ஏற்பட்டிருக்கா டாக்டர்?''

"ஆமாம்... வந்ததுமே எக்ஸ்ரே எடுத்து பார்த்துட்டேன். வலது காலைக் காட்டிலும் இடது காலில் சிவியர் ப்ராக்சர் ரெண்டு மாசமாவது ஹாஸ்பிடல்ல இருந்தாகணும்..."

"இந்த விபத்தைக் குறித்து உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருக்கா டாக்டர்....?"

"யூ மீன்?"

"இது உண்டாக்கப்பட்ட விபத்தா...? இல்லை தற்செயலா நேர்ந்ததா? ஏன்னா மிஸ்டர் பரணிக்கு விரோதிகள் இருக்கலாமே...?"

"நோ... இன்ஸ்பெக்டர்... இந்த விபத்துக்கு எதிரிகள் யாரும் காரணமா இருக்க முடியாது... மிஸ்டர் பரணி குடிப்பழக்கம் உள்ளவர். இந்த விபத்து நடந்த போதும் குடிபோதையில்தான் இருந்திருக்கிறார். அந்த போதையின் காரணமாகத்தான் விபத்தும் நடந்திருக்கிறது."

"பரணியோட ஒய்ப்புக்கு தகவல் கொடுத்திட்டிங்களா?"

"எஸ்.டி.டி.யில் பேசிட்டேன். இந்நேரம் வந்திட்டிருப்பாங்க..."

"காரோட முன் சீட்ல ரத்தம் நிறைய கொட்டியிருந்தது டாக்டர். ஆனா நீங்க பேஷண்ட்டுக்கு ரத்தம் செலுத்தலை. என்ன காரணம் டாக்டர்...?"

பஞ்சவர்ணம் லேசாய், திடுக்கிட்டாலும்... அந்த திடுக்கிடலை ஒரு சின்னப் புன்னகையின் மூலம் மறைத்தபடி சொன்னார். "பரணிக்கு நல்ல ஸ்டாமினா. ரத்த இழப்பு இருந்தாலும் அவர் மயக்கமடையலை. இன்னும் இரண்டு நாள்ல வலது காலில் ஒரு ஆபரேஷன் பண்ண வேண்டியிருக்கு. அந்த சமயத்துல ப்ளட் தேவைப்படும்..."

இன்ஸ்பெக்டர் அடுத்த கேள்விக்குப் போகும்முன்...



"அம்மா...!"

பரணி முனகினான். பலஹீனமாய்க் கண்களைத் திறந்தான். டாக்டர் பஞ்சவர்ணம் போலிப் பதட்டத்தோடு அவன் அருகே குனிந்தார்.

"ப...ர...ணி"

பரணி அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டான். "டா...க்...டர்! எ...எ...னக்கு ஒ...ண்ணும் ஆ...ஆயிடாதே?"

"நோ... எதுவும் ஆகாது... யூ...ஆர்... ஆல்ரைட்."

"டா...க்...டர்..."

"ம்... சொல்லுங்க..."

"எ... எ... என் இரண்டு கா...காலையும் அசைக்க முடியலை. டாக்டர்! எ... என் காலை எடுத்துடுவீங்களா? அ... அப்படி எ... எடுக்க... வே... வேண்டிவந்தா... ஒரு இஞ்செக்ஷன் போ... போட்டு எ... என்னைக் கொன்னுடுங்க... டாக்டர்..."

"நோ... நோ... பரணி! யூ...ஆர்... இன் இமேஜனரி... திங்க்ஸ். உங்க ரெண்டு காலிலேயும் லேசான பிராக்சர்தான்... அதை சீக்கிரமாவே குணப்படுத்திடலாம்...! உ உங்களுக்கு உடம்புல வேற ஏதாவது பாகத்துல வலி இருக்கா... பரணி"

"மு...முதுகில வலி இருக்கு டாக்டர்..."

பஞ்சவர்ணம் பக்கத்தில் நின்றிருந்த நர்ஸைப் பார்த்தார். "சிஸ்டர்! பெத்தடின் இன்செக்ஷன் குடுங்க... வலி குறையற வரைக்கும் அவர் கான்ஷியஸில் இருக்க வேண்டாம்..."

"எஸ்... டாக்டர்..."

நர்ஸ் இஞ்செக்ஷன் மருந்துக்காக நகர்ந்து போக டாக்டர் இன்ஸ்பெக்டரிடம் திரும்பினார்.

"எனி மோர் கொஸ்டியன்ஸ் இன்ஸ்பெக்டர்?"

''எஸ்... ஒன்மோர் கொஸ்டியன்.''

''ப்ளீஸ்...''

''பொதுவா ஆக்ஸிடெண்ட் கேஸ்களை கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல்தான் ஹேண்டில் பண்ணும். ஆனா மிஸ்டர் பரணியை ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டிலிருந்து நீங்களே கொண்டு வந்துட்டீங்க. ட்ரீட்மெண்ட்டையும் ஆரம்பிச்சுட்டீங்க... ஸோ... இந்த ஆக்ஸிடெண்ட் சம்பந்தமா போலீசுக்கு நீங்கதான் ரிப்போர்ட் தரணும். பின்னாடி ஏதாவது பிரச்னைங்க வந்தாலும்... நீங்கதான் அதை பேஸ் பண்ணனும்... டு யூ அக்ரி... வித் திஸ்...?''

''வித் பிளஷர்'' என்றார் டாக்டர்.

அதே விநாடி -

வாசலில் ஏதோ சத்தம்.

யாரோ வீறிட்டு அலறிக் கொண்டு வருகிற மாதிரி... கேட்க டாக்டர் பஞ்சவர்ணம் வெளியே வந்து எட்டிப் பார்த்தார்.

ஹாஸ்பிடல் வாசலில் டாக்ஸி ஒன்று நின்றிருக்க... அதிலிருந்து இறங்கிய கிருபா... தலைவிரி கோலமாய் வராந்தாவில் ஓடி வந்து கொண்டிருந்தாள்.

''டாக்டர்... டாக்டர்... அ... அவருக்கு ஒண்ணும்... ஆபத்து இல்லையே?''

ஓடிவந்தவளை எதிர்கொண்டார் டாக்டர். புன்னகைத்தார். ''நோ... ஹார்ம்... மிஸஸ் கிருபா. ரெண்டு காலிலேயும் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கு அவ்வளவுதான். உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை.''

''அ... அவர்கிட்டே... நான் பேச... பேச முடியுமா... டாக்டர்?''

''தா... தாராளமா.. பேசலாம் வாங்க'' கிருபாவை உள்ளே கூட்டிக் கொண்டு போனார் டாக்டர் பஞ்சவர்ணம்.



இரண்டு கால்களிலும் கனமான பாண்டேஜ்களோடு கண்மூடிப் படுத்திருந்த பரணி - கிருபாவின் குரலைக் கேட்டு மெதுவாய் கண்விழித்தான்.

''கி...ரு...பா...''

''எ... என்னங்க... அந்த ரா...த்திரி நேரத்துல எதுக்காக சேலம் புறப்பட்டுப் போனீங்க?''

''வ... வந்து வந்து...'' பேசத் திணறுவது போல பாவ்லா காட்டினான் பரணி. பஞ்சவர்ணம் குறுக்கிட்டார். ''பரணி! நீங்க ஸ்ட்ரெய்ன் பண்ணிக்க வேண்டாம். பேச முடிஞ்சா பேசுங்க... முடியலைன்னா விட்டுடுங்க. இப்போ உங்களுக்கு வேண்டியது ரெஸ்ட்தான்...''

டாக்டர் பஞ்சவர்ணம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே...''

நர்ஸ் பெத்தடின் இஞ்செக்ஷனோடு வந்து பரணியின் இடதுபக்க தோள்பட்டையைப் பற்றி ஊசியைக் குத்தினாள்.

கிருபா பஞ்சவர்ணத்தைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டாள். ''டாக்டர்! நீங்க மட்டும் சரியான நேரத்துக்கு அந்த வழியா வராமே இருந்திருந்தா... அவரோட கதி என்னவாயிருக்கும்...? அவரைக் காப்பாத்தின உங்களுக்கு...?''

''நோ... பார்மாலிடீஸ்...!! உங்க கணவர் பரணியைக் காப்பாத்த முடிஞ்சது என்னோட அதிர்ஷ்டம்... மிஸஸ் கிருபா.''

## 11

குரங்குகளுக்குப் பிடித்தமான ஊர் எது தெரியுமா? ரூபலா கேட்க விவேக்கும் ராஜேந்திரனும் விழித்தார்கள். ராகத்தில் 'ஈவினிங் ஷோ' பார்த்துவிட்டு காரில் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

''தெரியலையே!'' இருவரும் தலையாட்ட...

''வால்பாறை'' என்றாள் ரூபலா.

ராஜேந்திரன் சிரித்துவிட்டு 'நான் ஒரு ஜோக்' சொல்லட்டுமா'' என்றான்.

''சொல்லு... ஆனா அது ஒரிஜனலா இருக்கணும்.''

''ஒரிஜினல்தான்.''

''சொல்லு பார்க்கலாம்.''

''பத்மா இன்னிக்கு ஈரோடு போயிருக்கா, நாளைக்கு எப்படி வருவா?''

''பேனோடு வருவா!'' ரூபலா பட்டென்று சொன்னதும் ராஜேந்திரன் ஆச்சரியப்பட்டான். ''எப்படி சிஸ்டர் கரெக்டா சொன்னீங்க..?''

''இது ஏற்கனவே பத்திரிகையில் வந்த ஜோக்...''

''ஏண்டா... உனக்கு ஒரிஜனலா எதுவுமே தோணாதா?'' விவேக் ராஜேந்திரன் தலையில் தட்டிக் கொண்டிருக்கும் போதே...

சாயிபாபா காலனிக்குள் கார் நுழைந்து அழகேசன் தெருவுக்குள் பிரவேசித்து வேகத்தைக் குறைத்துக் கொண்டது.

''ராத்திரி ஒன்பது மணிக்கே இந்த ஏரியா அடங்கிடுதே?''

''இப்ப பரவாயில்லை... முன்னேயெல்லாம் எட்டு மணிக்கே அடங்கிடும்'' ராஜேந்திரன் காரை வீட்டுக் காம்பவுண்ட் கேட்டுக்கு... முன்பாய் நிறுத்தி இறங்கி கேட்டில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டை நோக்கிப் போனான். பாண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து சாவியை எடுத்துப் பூட்டின் வாய்க்குக் கொடுத்தபோது -

பக்கத்து பங்களாவினின்றும் அகர்வால் ராஜேந்திரனை நோக்கி வந்தார்.



''மிஸ்டர் ராஜேந்திரன்!''

அவன் திரும்பி அவரைப்பார்த்து மலர்ந்தான்.

''வாங்க... ஸார்...''

''ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்... ஒரு சின்ன உதவி;''

''என்ன?''

''என் வீட்டு டெலிபோன் திடீர்னு டெட் ஆயிடுச்சு. இன்னிக்கு ராத்திரி வெளியூர்களுக்கு எஸ்.டி.டி. போட வேண்டியிருக்கு. ஸோ... எக்சேஞ்சுக்கு உங்க டெலிபோன் மூலமா... என்னோட டெலிபோன் நெம்பரைக் கொடுத்து... சரிபார்க்கச் சொல்லணும்.''

''இவ்வளவுதானே...! உங்க நெம்பர் என்ன ஸார்..?''

''எய்ட் டபுள் ஃபோர் நைன் சிக்ஸ் ட்டூ...''

''நான் போன் பண்ணி சொல்லிடறேன்... ஸார்.''

''தாங்யூ... வெரிமச்...'' ராஜேந்திரனைப் பார்த்து அகலமாய் புன்னகைத்த அகர்வால் திரும்பி பங்களாவை நோக்கி நடந்தார். காம்பவுண்ட் கேட்டைத் திறந்து வைத்த ராஜேந்திரன் - போர்டிகோவில் காரைக் கொண்டு போய் நிறுத்தினான். விவேக்கும் ரூபலாவும் இறங்கினார்கள். ராஜேந்திரன் சொன்னான்.

''இப்ப... வந்துட்டுப் போனாரே... அவர்தான் அகர்வால்.''

விவேக் முகத்தில் எந்த சலனமும் காட்டாமல் நடந்தான். ஹாலுக்குள் நுழைந்ததும் டெலிபோனை நெருங்கி ரிஸீவரை எடுத்தான். டயலில் சில நெம்பர்களைச் சுழற்றி... விட்டு... ''மாத்ருபூதம் ப்ளீஸ்'' என்றான்.

ராஜேந்திரனும் ரூபலாவும் வியப்பான முகங்களோடு விவேக்கையே பார்த்துக் கொண்டிருக்க அவன் தொடர்ந்து பேசினான்.

''மிஸ்டர்... மாத்ருபூதம்! நான் விவேக்.''

''...''

''வேலையெல்லாம் முடிச்சிட்டீங்களா?''

''...''

''தாங்க்யூ...'' ரிஸீவரை விவேக் சாத்த ராஜேந்திரன் திகைப்பாய் கேட்டான். ''விவேக்... யாருக்கு போன் பண்ணினே...?''

''டெலிபோன் எக்சேஞ்ச் சூப்பிரண்டெண்ட் மாத்ருபூதத்துக்கு.''

''யாருக்கு கனெக்ஷன் கொடுக்கச் சொன்னே!''

''அகர்வாலுக்கு...''

''என்ன குழப்பறே...?''

''நான் குழப்பலை... ராஜேந்திரா... அகர்வால் வீட்டு டெலிபோன் டெட் ஆனதுக்கு காரணமே நான்தான்.

''அந்த போனை டெட்டாக்கி உன் வீட்டு டெலிபோனிலும் சில சில்மிஷம் பண்ணச் சொல்லியிருக்கேன்.''

''சில்மிஷமா?''

''எஸ்... அகர்வால் வீட்டு டெலிபோன் ரிங் ஆகும் போதெல்லாம் உன் வீட்டு டெலிபோனும் ரிங் ஆகும். ரிஸீவரை எடுத்தா... அகர்வால் யாரோடு பேசினார்ங்கிறது வெட்ட வெளிச்சமாகும்... என்ன பேசினார்ங்கிறதும் தெரியும்...''

''இதெல்லாம்... எ...எதுக்கு? அகர்வாலை உனக்குத் தெரியுமா?''

''பேஷா! அவருக்காகத்தானே நான் கோயமுத்தூருக்கே வந்தேன். போன பத்து நாளைக்கு முன்னாடிதான் எனக்கு அகர்வாலைப் பத்தின ரிப்போர்ட்ஸ் வந்தது. அவர் தன்னோட உத்தியோக அதிகாரத்தைப் பயன்படுத்தி முறையற்ற வகைகளில்



சொத்துக்களை சேர்த்து ஸ்விஸ் பேங்கில் முடக்கம் செய்வதாய் புகார். அதைக் கண்டுபிடிக்கிறதுக்காகத்தான் ... தம்பதி சமேதராய் கோவை விஜயம். அவர்களோட வீட்டு அட்ரஸை ரிப்போர்ட்டில் பார்த்த நான் ஒரு விநாடி திகைச்சுப் போயிட்டேன். காரணம்... உன் வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் அவருக்கு. இது எப்பேர்ப்பட்ட சான்ஸ்...? உபயோகப்படுத்திக்க வேண்டாமா...? வெறுமனே அவரைக் கண்காணிச்சுப் பிரயோஜனமில்லை. அவரோட டெலிபோனிக் கான்வர்சேஷனை க்ளோஸா அப்சர்வ் பண்ணினாத்தான் அவரைப்பத்தி ஒரு கணிப்புக்கு வரமுடியும்.''

ராஜேந்திரன் பிரமிப்போடு... விவேக்கைப் பார்த்தான். ''டெலிபோன் லைன்ல சில்மிஷம் பண்ணும் போது வீட்ல யாரும் இருக்கக் கூடாதுங்கிறதுக்காகத்தான் சாயந்தரம் சினிமாவுக்கு போகலாம்னு சொன்னியா...?''

''அதே''

ரூபலா விவேக்கை முறைத்துக் கொண்டிருந்தாள்.

''சிஸ்டருக்கு இந்த அகர்வால் விஷயம் தெரியாது போலிருக்கே...'' விவேக் புன்னகைத்தான்.

''தெரியாது... ஊட்டி, முதுமலை பாரஸ்ட் போகலாம்னு சொல்லித்தான் கூட்டிட்டு வந்தேன்.''

ரூபலா விவேக்கின் தோள்பட்டையில் மெலிதாய் குத்தினாள். ''துரோகம்... பச்சைத் துரோகம்...''

''பச்சைன்னா... எந்தப் பச்சை...? கரும்பச்சையா...? இலைப்பச்சையா...?''

''உங்களை... உங்களை...''

''ராஜேந்திரனுக்கு முன்னாடி என்னைக் கட்டிப்பிடிச்சு முத்தம் குடுத்துடாதே...''

''யூ...யூ...யூ...'' ரூபலா கோபத்தில் வார்த்தைகள் வராமல் முகம் சிவந்து போய்க் கத்தினாள்.

## 12

நடுநிசி ஒரு மணி.

ஒரு ப்ரீப் கேஸோடு டாக்டர் பஞ்சவர்ணம் பரணியின் அறைக்குள் நுழைந்தார். கதவைத் தாழிட்டுக் கொண்டு... கட்டிலை நெருங்கினார். பரணி எழுந்து உட்கார்ந்தான்.

''டாக்டர்? நான் கிளம்பலாமா?''

''கிளம்பலாம்...''

''நர்ஸ்...?''

''விடியற்காலை அஞ்சுமணி வரைக்கும்... அவளுக்கு வேற ஒரு பேஷண்டைப் பார்த்துக்கிற வேலை குடுத்திருக்கேன்...''

''எனக்கு காரியத்தை முடிக்க ஒரு மணிநேரம் போதும் டாக்டர்'' பரணி சொல்லிக் கொண்டே வேறு ட்ரசுக்கு மாறினான். டாக்டர் கொண்டு வந்த ப்ரீப் கேஸைத் திறந்து... சம்மர் கிராப் சைஸில் ஒரு விக்கைப் பொருத்திக் கொண்டான். தாடைப் பகுதிக்கு கெட்டியான தாடியை ஒட்ட வைத்தான். கண்களுக்கு கண்ணாடியைக் கொடுத்ததும் - ரிவால்வரை எடுத்து- ''புல்லட் சேம்பரில்... நிரம்பியிருந்த தோட்டாக்களைச் சரிபார்த்து சட்டையின் மார்புப் பகுதிக்குள் திணித்துக் கொண்டான். அதற்குள் டாக்டர் பஞ்சவர்ணம் - பாண்டேஜ் சுற்றிய இரண்டு மரக்கட்டைக் கால்களை கட்டிலின் கீழ்ப்பகுதி ஸ்டாண்டில் தொங்கவிட்டு மூன்று தலையணைகளின் உதவியால் - பரணி படுத்துத் தூங்குவதைப் போல செட்டப் செய்தார்.

''டாக்டர்?''



பஞ்சவர்ணம் நிமிர்ந்தார்.

''நான் வர்ற வரைக்கும்... நீங்க... இதே ரூம்ல இருக்கப் போறீங்க... இல்லையா...?''

''ஆமா...''

''நீங்க இந்த ரூம்ல... ஒரு மணிநேரம் இருந்தா... யாருக்கும் எந்த சந்தேகமும் வராதே...!''

''சந்தேகம் வராதபடி நடந்துக்க வேண்டியது... என் பொறுப்பு. நீங்க தைரியமாய்ப் போயிட்டு வாங்க...''

''தாங்க்யூ டாக்டர்.''

''இந்த தாங்க்ஸ் சொல்றதையெல்லாம் பின்னாடி வெச்சுக்கலாம் பரணி. நீங்க மொதல்ல கிளம்புங்க...''

பரணி மெல்ல நடந்து போய் ஜன்னல் கதவைத் திறந்து கம்பிகள் இல்லாத அதன் மறுபக்கத்தில் தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தான்.

மாவட்ட மைய நூலகம்
தேதி : ..................

இருட்டு நிசப்தம்.

''வர்றேன்...டாக்டர்...'' சொல்லி ஜன்னலின் விளிம்பில் ஏறி மறுபக்கம் குதித்தான். குதித்ததும் சில நாய்கள் நிதானித்து... பின் ஹாஸ்பிடலின் பின்பக்கத்தை சுற்றிக் கொண்டு தெருவுக்கு வந்தான். தெரு விளக்குகள் அணைந்து போயிருந்த அந்தத் தெருவில்... ஒரு ஐந்து நிமிஷ நேரம் நடந்து - காலியாய் போன ஒரு ஆட்டோவை நிறுத்தி ஏறிக் கொண்டான்.

''எங்க ஸார்... போகணும்?''

''சாயிபாபா காலனி...''

ஆட்டோ வீறியது.

பத்து நிமிஷப் பயணம்.

கிளை நூலகம்
நாள் :

சாயிபாபா காலனியின் முகப்பில் இறங்கி ஆட்டோவுக்கு காசைக் கொடுத்து அனுப்பிவிட்டு அழகேசன் ரோட்டை நோக்கி நடந்தான். தெரு நிசப்தமாய் ஆகி நடமாட்டம் இன்றி இருக்க - பரணி வேக வேகமாய் நடந்து...

அகர்வாலின் வீட்டுப் பின்பக்கத்துக்கு வந்தான். ஏற்கனவே பார்த்து வைத்திருந்த காம்பவுண்ட் சுவர் மேல் ஏறி உட்பக்கம் குதித்து...

கட்டிடத்து பின்பக்கம் இருந்த பைப்களை பிடித்துக் கொண்டு மேலே ஏறி மொட்டை மாடியில் குதித்து, படிக்கட்டுகள் வழியே... கீழே இருக்கும் மாடி வராந்தாவுக்குள்... ஜாக்கிரதையாய் நுழைந்தான்.

இருட்டோடு இரண்டு அறைகள் சாத்தியிருக்க - ஒரு அறையின் வெண்டிலேட்டரில் மட்டும் - ஜீரோ வாட்ஸ் விளக்கின் நீலநிற வெளிச்சம் ஒட்டியிருந்தது.

பரணி சைலன்ஸர் பொருத்தப்பட்ட ரிவால்வரை உருவிக் கொண்டு...

அந்த அறைக் கதவை மெல்லத் தொட்டான்.

கதவு மெல்ல உள்ளே போயிற்று.

பரணி அறைக்குள் கொட்டியிருந்த ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் பார்வையைத் துரத்த...

கட்டில் காலியாய் இருந்தது.

பரணி திடுக்கிட்டுப் போய் -

சுற்றும் முற்றும் பார்த்தான்.

''பாத்ரூமில் இருப்பாரோ...?'' யோசித்துக் கொண்டே பாத்ரூமைத் தேடியவனின் பார்வையில்



கட்டிலுக்கு கீழே நீட்டிக் கொண்டிருந்த...

அந்த இரண்டு கால்கள் தெரிந்தது.

தண்டுவடம் குளிரின் உச்சிக்குப் போக... பரணி நெறிக்கும் இதயத்தோடு - கட்டிலுக்குக் கீழே குனிந்து பார்த்தான்.

மார்பில் ரத்த வட்டத்தோடு...

நிலைத்த கண்களோடு...

அகர்வால் அமரராகியிருந்தார்.

## 13

டாக்டர் பஞ்சவர்ணம் தன் மணிக்கட்டில் இருந்த சிட்டிஸன் குவார்ட்ஸைப் பாத்தார். நேரம் 1.30. பயத்திலும் கலக்கத்திலும் அடிவயிறு பிசைந்து விட்டது. பரணி யார் கையிலும் மாட்டிக் கொள்ளாமல் பத்திரமாய் ஹாஸ்பிடல் வந்து சேர்வானா?''

''டொக்... டொக்...''

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தார். பஞ்சவர்ணம் குரல் கொடுத்தார்.

''யாரது...?''

''டாக்டர்... நான் விமலா...''

''என்ன...?''

''உங்களுக்கு போன்...''

''யார்கிட்டேயிருந்து...''

''மிஸஸ் பரணி பேசறாங்க...''

பஞ்சவர்ணம் பதட்டமாய் எழுந்தார். கதவைக் கொஞ்சமாய் திறந்து எட்டிப் பார்த்து - வெளியே நின்றிருந்த நர்ஸ் விமலாவைப் பார்த்து ''வர்றேன்... போ...'' என்றார். அவள் ''எஸ் டாக்டர்'' என்று சொல்லி நகர்ந்து போனதும் வெளியே வந்து சில விநாடி நேரம் நின்று ஜாக்கிரதை காத்தபின் அறைக்கதவை வெளிப்பக்கமாய் சாத்திக் கொண்டு டெலிபோனை நோக்கிப் போனார்.

மேஜையின் மேல் மல்லாத்தி வைத்திருந்த ரிஸீவரை எடுத்து காதுக்கு தந்து ''ஹலோ...'' என்றார்.

''டாக்டர் நான் கிருபா... பேசறேன்...''

''என்ன மிஸஸ் கிருபா...?''

''அவருக்கு இப்போ எப்படியிருக்கு...?''

''ந... நல்லாயிருக்கார்...''

''ராத்திரி எட்டு மணிக்கு அவரை பார்த்துட்டு வீட்டுக்கு கிளம்பும் போது... முதுகெல்லாம் வலிக்குதுன்னு சொன்னார். தூங்காம கஷ்டப்படறாரோன்னு நான் போன் பண்ணினேன்...''

''நோ... ப்ராப்ளம்... தூக்க மாத்திரை உபயத்தாலே நல்ல சவுண்ட் ஸ்லீப்ல இருக்கார். நீங்க ஒர்ரி பண்ணிக்க வேண்டாம்.''

''டாக்டர்...! இருபத்தி நாலு மணிநேரமும் அவர் பக்கத்துல இருக்கணும்ன்னு ஆசைப்படறேன்...! ஆனா நீங்கதான் அவர் பக்கத்துல இருக்கக் கூடாதுன்னு கண்டிப்பா சொல்லிட்டீங்க...''

''மிஸஸ் கிருபா! பரணிக்கு பக்கத்துல நீங்க இருந்தா அவர் உங்ககிட்டே பேசறதுக்கு முயற்சி பண்ணுவார். அவர் தன்னோட உடம்பை ஸ்ட்ரெயின் பண்ணிக்கிட்டா... அவருக்கு அது கெடுதலா முடியும். வாரம் பத்துநாள் பொறுங்க... அவர் உடம்பு கொஞ்சம் தேறினதும்...நீங்க அவர் பக்கத்திலேயே இருக்கலாம்...''

''நாளைக்கு அவருக்கு ஆபரேஷன் பண்ணப் போறீங்களா டாக்டர்?''



''ஆமா... வலது கால்ல ஒரு சின்ன ஆபரேஷன்...''

''நான் நாளைக்கு எத்தினி மணிக்கு வரட்டும் டாக்டர்?''

''காலைல எட்டு மணிக்கு வாங்களேன்.''

''தாங்க் யூ டாக்டர்'' மறுமுனையில் கிருபா ரிஸீவரை வைத்துவிட பஞ்சவர்ணம் வியர்த்துப்போன முகத்தை கர்சீப்பால் ஒற்றிக் கொண்டே வேகமாய் பரணியின் அறையை நோக்கிப் போனார்.

வெளிபக்கத் தாழ்ப்பாளை திறந்து கொண்டு உள்ளே நுழைந்த டாக்டர் ஆச்சரியப்பட்டார்.

கட்டிலில் பரணி உட்கார்ந்திருந்தான்.

''ப...ப...பரணி... எப்போ வந்தீங்க...?''

''நீ... நீங்க வெளியே கி...கிளம்பும் போதே... நா...நான்... உ...உள்ளே வந்துட்டேன்.''

''போ... போன காரியம் எ... என்னாச்சு?''

''டாக்டர்!''

''வாட் ஹேப்பண்ட்...? ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க?''

நர்ஸ் எட்டிப்பார்த்தாள்.

''டாக்டர்''

''எஸ்''

''ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும், ஒரு க்ரைம் பிராஞ்ச் ஆபீசரும் பேஷண்ட் மிஸ்டர் பரணியைப் பார்க்கிறதுக்காக வெயிட் பண்ணிட்டிருக்காங்க...''

சோர்வாய் படுத்திருந்த பரணி பளிச்சென்று கண்களைத் திறந்து டாக்டரைப் பார்க்க அவரும் திடுக்கிட்டுப் போய் பரணியைப் பார்த்தார். கிருபா பதட்டமாக நர்ஸிடம் கேட்டாள்.

"எதுக்காக இவரைப் பார்க்கணுமாம்... கேட்டியா?"

"கேட்கலை..."

"டாக்டர்! நான் அங்கே போறதுக்குள்ளே அகர்வாலை வேறு யாரோ முடிச்சுட்டாங்க...

"ஹி...ஈஸ் மார்டார்ட் பை ஸம்படி..."

## 14

மறுநாள் காலை எட்டு மணி.

போலீஸ் சடங்குகளுக்கு உட்பட்டுக் கொண்டிருந்தார் அகர்வால். விவேக்கும் எஸ்.பி.யும். வராந்தாவில் ஓரமாய் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

எஸ்.பி. ஆச்சரியப்பட்டார்.

"மிஸ்டர் விவேக்! நீங்க பக்கத்து பங்களாவில் இருக்கும் போதே... இந்த சம்பவம் நடந்திருக்கு."

"நான் இதை எதிர்பார்க்கலை ஸார்...! ராத்திரி பதினோரு மணி வரைக்கும் அகர்வால் பதினஞ்சு பேர்களுக்கு டெலிபோன் பண்ணி பேசினார். மூணு கால்கள் மட்டும் லோக்கல். மற்றது பூராவும் எஸ்.டி.டி. கால்ஸ். பதினோரு மணிக்குப் பின்னால் அவர் யாருக்கும் டெலிபோன் பண்ணலை. நானும் பனிரெண்டு மணி வரைக்கும் பங்களாவை வாட்ச் பண்ணிப் பார்த்துட்டுப் படுக்கப் போனேன். சம்பவம் பனிரெண்டு மணிக்கு மேல நடந்திருக்கு. வீட்ல அகர்வால் மட்டும் இருந்ததினாலே... வந்த கொலையாளி காரியத்தை சுலபமா முடிச்சுட்டுப் போயிருக்கான். காலையில ஆறு மணிக்கு வேலைக்காரன் வந்து கதவைத் தட்டும் போதுதான் அகர்வால் கொலை செய்யப்பட்டது தெரிஞ்சிருக்கு."



"ஸீன் ஆப் க்ரைம் பார்த்தீங்களா...?"

"பார்த்தேன்... எதுவும் அகப்படலை. பட்... மொட்டை மாடியின் தூசி படலத்தில் கான்வாஷ் ஷூக்களின் பிரிண்ட்ஸ் கிடைச்சிருக்கிறதாம். ஃபாரன்ஸிக் ரிப்போர்ட்..."

"புல்லட் காயம் எந்த வகைன்னு க்ளாஸிஃபை பண்ணினீங்களா?"

"டிக்கிங் வகை ஸார்...! மொத்தம் மூணு தோட்டா! ஹார்ட்ல... ரிப்போர்ஷன்ல... அப்டார்மன்ல... அப்படி முக்கியமான மூணு கேந்திரங்கள்ல... பாய்ஞ்சதாலே உடனடி மரணம்..."

"நேத்து ராத்திரி அவர் மொத்தம் பதினைஞ்சு நபர்களுக்கு டெலிபோன் பண்ணிப் பேசினதா சொன்னீங்க... அவர் யார் யாருக்குப் போன் பண்ணினார்ன்னு நோட் பண்ணியிருக்கீங்களா?"

"லிஸ்ட் இருக்கு... ஸார்."

"அதுல லோக்கல் கால்ஸ் யார் யாரு...?"

"ஃபர்ஸ்ட் பார்ட்டி திருமலைச்சாமி... திருமலைக் காட்டன் மில் ஓனர். ரெண்டாவது பார்ட்டி... பரணி... மூணாவது நபர்... தேவராஜ்... இவர் ஒரு ஆடிட்டர். இந்த மூணுபேர்ல பரணி மட்டும் அகர்வாலோடு பேசலை... பரணி வீட்டு வேலைக்காரன் பேசினான்..."

"டெலிபோனிக் கான்வர்சேஷனை அப்சர்வ் பண்ணீங்களா விவேக்...?"

"பண்ணினேன் ஸார்."

"எனிதிங் இம்பார்ட்டன்ட்...?"

"திருமலைச்சாமியிடம் அகர்வால் பணம் கேட்டார். இன்னும் நான்கைந்து நாட்களில் பணம் தருவதாக திருமலைச்சாமி சொன்னார். ஆடிட்டர் தேவராஜிடமும் இதே பண விவகாரம்தான்.

பரணியிடம் என்ன பிரச்னை என்று தெரியலை. ரிசீவரை எடுத்த வேலைக்காரன் ''பரணி ஒரு விபத்துல மாட்டி ஹாஸ்பிட்டல இருக்கிறதா அகர்வாலிடம் சொன்னான்.''

''இந்த மூணுபேரோட அட்ரஸையும் கலெக்ட் பண்ணிட்டீங் களா...?''

''எக்சேஞ்ச் மூலமா கலெக்ட் பண்ணிட்டேன். அகர்வாலைப் போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பிவிட்டு, அந்த மூணுபேர் கிட்டேயும் நேரடி விசாரணைக்குப் போக வேண்டியதுதான்.''

''மூணுபேர்ல யார் ஹாஸ்பிடல்ல இருக்கிறதா சொன்னீங்க?''

''பரணி...''

''எந்த ஹாஸ்பிடல்...''

''பஞ்சவர்ணம் நர்ஸிங்ஹோம்...''

## 15

பரணி கால்களில் பாண்டேஜ் கட்டோடு கண்மூடிப் படுத்திருக்க கிருபா டாக்டர் பஞ்சவர்ணத்திடம் கவலையான குரலில் பேசிக் கொண்டிருந்தாள். காலை மணி பத்து.

''டாக்டர்! அவர் வலியால துடிக்கிறதைப் பார்த்தா என்னோட மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்கு. ஏதோ ஆபரேஷன் பண்ணணும்னு சொன்னீங்களே? அதையாவது பண்ணி அவரோட வலியைக் குறைக்கலாமே டாக்டர்?''

''இன்னும் ரெண்டு நாள் போனால்தான்... ஆபரேஷன் தேவையா இல்லையான்னு சொல்ல முடியும். மிஸஸ் கிருபா... அவசரப்பட்டா வீ கான்ட் டூ எனிதிங்?''



''நான் போய் கேட்டுட்டு வர்றேன்'' என்ற பஞ்சவர்ணம் வெளியே போனார்... வேக வேகமாய் வரவேற்பறைக்குள் நுழைந்த போது விவேக்கும், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் உட்கார்ந் திருப்பது தெரிந்தது. அவர்களை நெருங்கிக் கை நீட்டினார்.

''ஐயம் டாக்டர் பஞ்சவர்ணம்.''

விவேக் கைகுலுக்கிக் கொண்டே கேட்டான். ''ஸாரி ஃபார் டிஸ்டர்பன்ஸ்... பேஷண்ட் பரணிகிட்டே ஒரு சின்ன என்கொய்ரி...?''

''என்கொய்ரி எதுக்காகன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஷ்யூர்... ஒன் மிஸ்டர் அகர்வால்... ஹி ஈஸ் ஒன் ஆபீசர் ஆஃப் இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட் ஈஸ் மர்டர்ட் பை சம்படி...''

''அகர்வால் மர்டர் சம்பந்தமாய் பரணியை எதற்காக விசாரிக்க வேண்டும்?''

''எக்ஸ்க்யூஸ் மீ டாக்டர்...! நாங்கள் பரணிகிட்டே பேச விரும்பறோம். அவர் இருக்கிற ரூமுக்கு கூட்டிட்டுப் போறீங்களா?''

''வாங்க...''

பஞ்சவர்ணம் கூட்டிக் கொண்டு போனார். வராந்தாவில் மூன்று பேரும் நடந்தார்கள். விவேக் கேட்டான்.

''பரணிக்கு ஆக்ஸிடெண்டா?''

''ஆமா...''

''எப்படி?''

''அவினாசிக்குப் பக்கத்துல... காரைக் கொண்டு போய் மரத்துல மோதிட்டார்.''

''பலமான காயமா...''

''இரண்டு காலிலும் போன் பிராக்சர்...''

''ஆக்ஸிடெண்ட் என்னிக்கு நடந்தது?''

''மூணு நாளைக்கு முன்னாடி'' சொல்லிக் கொண்டே பஞ்சவர்ணம் விவேக்கையும், இன்ஸ்பெக்டரையும் பரணி இருந்த அறைக்குள் கூட்டிக் கொண்டு போனார்.

பரணி வேண்டுமென்றே கண்களை மூடியிருந்தான். இருதயம் கலவரமாய் துடித்துக் கொண்டிருந்தது... பஞ்சவர்ணம் பரணியை நெருங்கி மெல்லக் குரல் கொடுத்தார்.

''மிஸ்டர் பரணி''

பரணி சிரமமாய் கண்களைப் பிரிப்பது போல் பாவனை செய்தான் ''டாக்டர்...''

''போலீஸ் உங்ககிட்டே ஒரு என்கொய்ரிக்காக வந்திருக்காங்க...''

''எ...ன்...கொய்...ரியா...?''

''எஸ்...'' விவேக் அவன் அருகே குனிந்தான். மெல்லிய குரலில் கேட்டான்.''

''உங்களுக்கு அகர்வாலைத் தெரியுமா...?''

''அ...கர்...வா...ல்...!'' பரணி நெற்றியைச் சுருக்கினான்.

''ஆமா... இன்கம்டாக்ஸ் ஆபீசில் சுபீரியர் ஆபீசர்.''

''தெ...ரி...யும்...''

''நேத்து ராத்திரி அவர் கொலை செய்யப்பட்டிருக்கார்...''

கண்களில் செயற்கையான 'ஆ'வைக் காட்டினான். பரணி எழுந்து உட்கார முயன்றான்.

''எ... எப்படி...?''

''ரிவால்வர்ல சுட்டிருக்காங்க...''



பரணி மௌனமாய் இருக்க... விவேக் தொடர்ந்தான்.

''நேத்து ராத்திரி பத்து மணியிலிருந்து பனிரெண்டு மணிக்குள் அகர்வால் மூணுபேரை டெலிபோனில் கான்டாக்ட் பண்ணியிருக்கார்.

''அந்த மூணுபேர்ல நீங்களும் ஒருத்தர்.''

பரணி இயல்பான குரலில் சொன்னான். ''என்னை எப்படி அவர் கான்டாக்ட் பண்ணியிருக்க முடியும்? நான்தான் ஹாஸ்பிடல்ல இருக்கேனே?''

''யூ...ஆர் கரெக்ட். உங்ககூட அவர் பேச முயற்சி பண்ணினார். பட்... டெலிபோனை உங்க வீட்டு வேலைக்காரன் அட்டெண்ட் பண்ணி நீங்க ஹாஸ்பிடல்ல இருக்கிறதா சொன்னான்.''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அகர்வாலோட டெலிபோனிக் கான்வர்சேஷனை ஓவர் ஹியரிங் மூலமா ரிக்கார்ட் பண்ணியிருக்கோம்...''

பரணி எச்சில் விழுங்கிக் கொண்டே கேட்டான். ''என்கிட்டே யிருந்து... எ... என்ன இன்பர்மேஷனை எதிர்பார்க்கறீங்க...?''

விவேக் புன்னகையோடு பரணியைப் பார்த்தான். ''மிஸ்டர் பரணி பிரான்க் வித் மீ... அகர்வால் சாதாரண மனுஷன் இல்லை. ஒரு பிக் ஷாட். அவர் காரணமில்லாமே ஒருத்தருக்கு போன்பண்ண மாட்டார். உங்களுக்கு எதுக்காகப் போன் பண்ணியிருப்பார்ன்னு நினைக்கிறீங்க...?''

''தெரியலையே...?''

''நோ... மிஸ்டர் பரணி... யூ. ஆர்... ஹைடிங் சம்திங். அவர் பத்து நாளைக்கு முன்னாடி மத்த ஐ.பி. ஆபீசரோடு உங்க கம்பெனியை ரெய்ட் பண்ணி சில முக்கியமான தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றியிருக்கார். இந்தத் தகவல் சரியா...?''

''ச... சரிதான்.''

''அகர்வால் அது சம்பந்தமா... உங்களைப் பிளாக்மெயில் பண்ணி பணம் கேட்டாரா...?''

''ம்... கேட்டார்...''

''நீ...நீங்க தந்தீங்களா?''

''தரலை...!பணம் தராத பட்சத்தில் ஆக்ஷன் எடுக்கிறதா சொல்லியிருந்தார். ஒருவேளை அதற்காகப் போன் பண்ணியிருக்கலாம்...''

''தேவராஜ் உங்க கம்பெனியின் ஆடிட்டர்தானே?''

''ஆமா...''

''அவரோடும் போன் பண்ணி பண விவகாரத்தைப் பத்தித்தான் அகர்வால் பேசியிருக்கார்.''

பரணி முகத்தில் எந்தவிதமான பாவத்தையும் உணர்ச்சியையும் காட்டாமல்... இறுக்கமாய் இருந்தான். விவேக் தொடர்ந்தான்.

''அகர்வாலுக்கு உத்தியோக ரீதியா நிறைய எதிரிகள். அவர் தன்னோட க்ளையண்ட்ஸை பிளாக் மெயில் பண்ணிப் பண்ணியே லட்சக் கணக்குல பணம் சேர்த்திருக்கார். பணத்தைக் கொடுத்தவங்களும் அவர்மேல வன்மம் வெச்சிருக்கலாம். அதுமாதிரி வன்மம் வெச்ச பார்ட்டியை உங்களுக்கு தெரியாதா மிஸ்டர் பரணி.''

''நோ...ஸார்...''

''அவசரப்படாம யோசிச்சு சொல்லுங்க.''

''அகர்வால் எனக்கு பத்து நாளாகத்தான் பழக்கம். அந்தப் பத்து நாளிலும் இரண்டு தடவைகள் அவரைப் பார்த்திருக்கேன்.

''ஸோ.... அவரை உங்களுக்கு அதிகம் பரிச்சயமில்லை.''



''ஆமாம்...''

விவேக்கும் உடன் வந்த இன்ஸ்பெக்டரும் விசாரணையை முடித்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

## 16

மறுநாள் இரவு பனிரெண்டரை மணி.

சாத்தப்பட்ட அறைக்குள் - டாக்டர் பஞ்சவர்ணமும், பரணியும் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''டாக்டர்! என்னோட லிஸ்ட்படி அகர்வால் இந்த நிமிஷம் இல்லை. என்னோட அடுத்த குறியான சுனந்தாவைத் தீர்த்துக் கட்டிட்டா கொஞ்சம் நிம்மதி. தேவராஜை வேணும்ன்னா கொஞ்சம் விட்டு நிதானமா தீர்த்துக் கட்டலாம்.''

''பரணி! அகர்வாலோட கொலை சம்பந்தமா போலீஸ் உங்களையும் விசாரணை பண்ணிட்டுப் போயிருக்கிற இந்த நேரத்துல நீங்க வெளியே போறது நல்லாயில்லை...''

பரணி சிரித்தான்.

''டாக்டர்! இதுதான் அற்புதமான நேரம். நான் ரெண்டு காலிலேயும் பாண்டேஜ் கட்டைப் போட்டுக்கிட்டு உங்க ட்ரீட்மெண்ட்ல இருக்கிறதைக் கண் கொண்டு பார்த்திட்டுப் போயிருக்காங்க. சுனந்தாவை நான் இப்போ தீர்த்து கட்டினா... சந்தேகம் எம்மேல கொஞ்சம்கூட வராது...''

''எனக்குக் கொஞ்சம் உதறலாயிருக்கு...''

''பயப்பட வேண்டியதேயில்லை டாக்டர்...'' சொன்னவன் கட்டிலினின்றும் கீழே இறங்கி ஜெர்கின் கோட்டைத் தரிக்க ஆரம்பித்தான். டாக்டர் பஞ்சவர்ணம் அந்த ராத்திரி நேரத்திலும்

வியர்க்க ஆரம்பித்த முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டே பரணிக்கு பக்கத்தில் வந்தார்.

''பரணி! நீங்க வெளியே போயிருக்கிற நேரத்தில் போலீஸ் உங்ககிட்டே விசாரணை நடத்த வந்துட்டா... விவகாரம் விபரீதமாயிடும்...''

''இந்த மிட் நைட்ல யார் வரப்போறாங்க டாக்டர்?''

''திடீர்ன்னு வந்துட்டா...''

''வந்துட்டா... ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி சமாளிக்க வேண்டியதுதான்.''

''சொல்ற பொய் பொருந்தணுமே?''

''டாக்டர்! நீங்க அளவுக்கு மீறி பயப்படறீங்க... சுனந்தா ரெண்டு மூணு நாள்ல மெட்ராசுக்கு போனாலும் போயிடுவா... மெட்ராசுக்கு போயிட்டா அவளைத் தீர்த்துக் கட்டறது கஷ்டம்... அவ அங்கிருக்கும் போதே... பரலோகத்துக்கு அனுப்பிடறது பெட்டர்...'' சொல்லிக் கொண்டே ஜன்னல் அருகே வந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

இருட்டு... நிசப்தம்.

''வரட்டுமா... டாக்டர்...?''

அறையைத் தாழிட்டு... நாற்காலியில் உட்கார்ந்த பஞ்சவர்ணம் தலையாட்ட பரணி ஜன்னலின் சட்டத்தைப் பற்றிக் கொண்டு மேலேறி வெளியே கொட்டியிருந்த இருட்டில் குதித்தான்.

## 17

மணிக்கட்டில் இருந்த சிங்கப்பூர் கடிகாரம் பிப்பாங்க்... பிப்பாங்க்... என்று அலாரம் இரைக்க டாக்டர் பஞ்சவர்ணம் சட்டென்று விழித்துக் கொண்டார். ரேடியத்தின் உதவியால் நேரம் பார்க்க திடுக்கிட்டுப் போய் எழுந்தார்.



நேரம் 3.40.

12.30க்கு வெளியே போன பரணி இன்னமுமா... அறைக்குத் திரும்பவில்லை...?'' - பதட்டமாய் யோசித்துக் கொண்டே போய் ஜன்னலைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தார். இருட்டில் ஒளிந்திருந்த குளிர்காற்று - முகத்தில் வேக வேகமாய் மோதியது. ஜன்னலைச் சாத்திவிட்டு வந்து மெல்ல நடை போட்டார்.

நேரம் கைக்கு சிக்காத ஐஸ் துண்டமாய் நழுவியது.

3.45

3.50

3.55

4.00

4.05

டாக்டரின் மனசு பூராவும் பயத்தீ பற்றிக் கொண்டு எரிந்தது.

''பரணிக்கு என்ன ஆகியிருக்கும்?''

''சுனந்தாவிடம் மாட்டிக் கொண்டு விட்டானா?''

''டொக்... டொக்''

அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

''யாரது...? ஆர்வமாய் கேட்டார்.

''டாக்டர்! நான்தான்'' - நர்ஸின் குரல்.

''என்ன...?''

''உங்களுக்கு போன்.''

கதவைக் கொஞ்சமாய் திறந்து - தலையை வெளியே நீட்டினார் டாக்டர்.

''யார்கிட்டேயிருந்து''

''இன்ஸ்பெக்டர்னு சொன்னார்.''

டாக்டர் பஞ்சவர்ணம் திடுக்கிட்டுப் போய் - அறையினின்றும் வெளிப்பட்டு - கதவைச் சாத்திக் கொண்டு டெலிபோனை நோகிப் போனார். ரிஸீவரை எடுத்து தவிப்பாய் பேசினார்.

''ஹலோ...''

''டாக்டர் பஞ்சவர்ணம்?''

''எஸ்...''

''டாக்டர்! இங்கே ராம்நகர் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டர் கோதண்டராமன் பேசறேன்...''

''சொல்லுங்க...''

''மூணு நாளைக்கு முன்னாடி - ஒரு கார் ஆக்ஸிடெண்ட்ல காயம் அடைஞ்ச பரணி... உங்க நர்சிங் ஹோம்லதானே ட்ரீட்மெண்ட் எடுத்திட்டிருக்கார்?''

''ஆமா...''

''அவர் இப்போ... பெட்ல இருக்காரா?''

டாக்டர் உஷாரானார்.

''ஏன்... என்ன விஷயம்...?''

''ப்ளீஸ்... அவர் பெட்ல இருக்காரா... இல்லையான்னு பார்த்து சொல்லுங்க டாக்டர்...மேட்டர் ரொம்பவும் அர்ஜெண்ட்...''

டாக்டர் பஞ்சவர்ணம் ரிஸீவரின் வாயை மூடிக் கொண்டு சில விநாடிகள் யோசித்தார்.



''என்ன பதிலைச் சொல்லலாம்?''

''போலீசாருக்கு எப்படியோ விஷயம் தெரிந்திருக்கிறது...''

இருக்கிறார் - என்று சொன்னால் மாட்டிக் கொள்வோம் இல்லையென்று சொல்லிவிட்டால்... உண்மையைச் சொன்னது போலாகிவிடும்... தப்பித்துக் கொள்ளலாம்.

மேலும் சில விநாடிகள் யோசித்துவிட்டு ரிஸீவருக்கு வாயைக் கொடுத்தார் டாக்டர்.

''இன்ஸ்பெக்டர்''

''சொல்லுங்க! டாக்டர்''

''பரணி பெட்டில் இல்லை.''

''நல்லா பார்த்தீங்களா...?''

''பார்த்துட்டுதான் சொல்றேன்...''

''அப்போ... இங்கே... ஆடீஸ் வீதியில் கொலையுண்டு கிடக்கிறது பரணிதான்... சந்தேகம் இல்லை.''

## 18

டாக்டர் பஞ்சவர்ணம் தெறிக்கிற இதயத் துடிப்போடு அந்த விடியற்காலை நேரத்தில் ஆடீஸ் வீதிக்குப் போய்ச் சேர்ந்தபோது - போலீஸ் அங்கே பெட்ரோமாக்ஸ் விளக்கோடு இயங்கிக் கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் ஒருவர் பஞ்சவர்ணத்தை எதிர்கொண்டு - பரணி விழுந்து கிடந்த இடத்தை நோக்கிக் கூட்டிப் போனார். ஜனங்கள் ஆங்காங்கே தெரிந்தார்கள்.

''ஆச்சரியமாயிருக்கு டாக்டர். ரெண்டு காலிலும் பிராக்சரோடு உங்க ஹாஸ்பிடலில் அசைய முடியாத நிலையில் படுத்திருந்த

பரணி இங்கே ஜெர்கின் கோட், தொப்பி... கூலிங்கிளாஸ் கான்வாஸ் ஷு சகிதம் செத்துக் கிடக்காறே... எப்படி?''

''அஅதான் எனக்கும் புரியலை...''

''இப்படி வாங்க டாக்டர்...'' - இன்ஸ்பெக்டர் கூட்டிப்போய் ரோட்டோரத்தைக் காட்ட.

பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் -

மல்லாந்து தெரிந்தான் பரணி. ஜெர்கின் கோட் முழுவதும் கோடு கோடாய் ரத்தம். கழுத்துப் பகுதியில் அதிக ரத்தம் தேங்கியிருந்தது. கண்களும் வாயும் திறந்து கிடக்க திடுக்கிட்ட மாதிரி செத்துப் போயிருந்தான்.

இன்ஸ்பெக்டர் முதுகுக்குப் பின்னாலிருந்து கேட்டார்

''இவர் பரணிதானே?''

''ஆ... ஆமா...?''

''எங்களுக்கு அரைமணி நேரத்துக்கு முன்னாடிதான் தகவல் கிடைச்சது. இந்த வழியா போன பால்காரர் ஒருத்தர்தான் பாடியை முதன் முதலா பார்த்து தகவல் கொடுத்திருக்கார். டாக்டரோட ரிப்போர்ட்படி மரணம் மூணுமணி நேரத்துக்கு முன்னாடியே நடந்திருக்கணும். அதாவது பரணி ஹாஸ்பிடலை விட்டு ராத்திரி ஒரு மணிக்கே கிளம்பியிருக்கணும்...''

பஞ்சவர்ணம் வியர்த்துப் போன முகத்தைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டு பதில் பேச முடியாமல் தவித்த அதே விநாடிகளில்...

பின்னால் ஜீப் சத்தம் கேட்டது.

டாக்டரும், இன்ஸ்பெக்டரும் திரும்பிப் பார்க்க ஜீப்பினின்றும் விவேக்கும், இன்னொரு போலீஸ் ஆபீசரும் வந்து கொண்டிருந்தார்கள்.



இன்ஸ்பெக்டர் எதிர்கொண்டு சல்யூட்டை விநியோகிக்க - விவேக் அதை வாங்கிக் கொண்டே பரணியின் உடலை நெருங்கிப் பார்த்துவிட்டு பஞ்சவர்ணத்திடம் வந்தான்.

''டாக்டர்...''

''எ...எஸ்...''

''உங்களுக்கு ரொம்பவும் வேர்க்குது இந்த விடியற்காலை குளிர்ல. ஒருத்தர்க்கு வேர்க்குதுன்னா... அவர் ஏதாவது தப்பு பண்ணியிருக்கணும்...''

டாக்டர் வாய் குழறினார்... ''பரணியோட மரணம் எனக்கொரு ஷாக்? அதான் இப்படி வேர்த்துக் கொட்டுது...''

''பரணி உங்ககிட்டதானே ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டார்?''

''ஆ... ஆமா...''

''அவருக்கு ரெண்டு காலிலேயும் போன் பிராக்சர்?''

''ஆ... ஆமா...''

''அந்த நிலைமையில் அவராலே நிச்சயமா நடக்க முடியாது ஈஸிட்...?''

''பின்னே எப்படி... இந்த ஜெர்கின் கோட் கோலம்...?'' பரணியைக் காட்டினான் விவேக் டாக்டர் தலையை ஆட்டினார்.

''அது எப்படின்னு எனக்கு தெரியலை...''

''நோ டாக்டர்... உங்களுக்கு நல்லாவே தெரியும். நீங்க எந்தப் பொய்யைப் பேசினாலும் அது சாயம் போயிடும். பரணியோட மரணச் செய்தி எனக்குக் கிடைச்சதும் நேரா உங்க ஹாஸ்பிடலுக்கு போய்ட்டுதான் வர்றேன். என்னோட உத்தியோக தோரணையும் இந்த போலீஸ் ஆபீசரையும் காட்டி ஹாஸ்பிடலில் இருந்த ரெண்டு நர்ஸையும் மிரட்டப் போக - எனக்கு சில உதிரித் தகவல்கள்

கிடைத்தது. உதிரி நெம்பர் ஒண்ணு ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு பரணி ரூமுக்கு போன நீங்க... பரணியோட டெத் ந்யூஸ் வர்ற வரைக்கும் அதே ரூம்ல இருந்திருக்கீங்க. உதிரி நெம்பர் ரெண்டு ஹாஸ்பிடலுக்கு வந்த நாளிலிருந்தே... எந்த நர்ஸையும் நீங்க அவரோட ரூம்ல அனுமதிக்கலை. உதிரி நெம்பர் மூணு பரணிக்கு எலும்பு முறிவுன்னு காட்றதுக்காக வேறொரு பேஷண்ட்டோட எக்ஸ்ரேக்களை உபயோகப்படுத்தியிருக்கீங்க... இந்த உதிரிகளெல்லாம் உண்மையா டாக்டர்..."

பஞ்சவர்ணம் திக்கென்று விழித்து - விவேக்கைப் பார்க்க விவேக் தொடர்ந்தான். அகர்வாலைத் தீர்த்துக் கட்டினதும் பரணிதான்னு இப்ப கன்பார்ம் ஆயிடுச்சு. அந்தக் கொலைக்கு நீங்களும் உதவியிருக்கீங்க.

"நோ..." பஞ்சவர்ணம் விவேக்கின் கைகளைப் பற்றிக் கொண்டார். "ஸார் நான்... எல்லா... உண்மைகளையும் சொல்லிடறேன்..."

"அதைத்தானே நானும் எதிர்பார்க்கிறேன்... ம்... சொல்லுங்க..."

பஞ்சவர்ணம் முகத்தை அடிக்கடி கர்சீப்பால் ஒற்றிக் கொண்டே ஒரு பத்து நிமிஷத்தை செலவழித்து எல்லாவற்றையும் சொல்லி முடித்தார்.

விவேக் முழுசுமாய் செவி மடுத்துவிட்டு - கேட்டான். "இந்தத் திட்டம் வேற யார் யாருக்கெல்லாம் தெரியும்...?"

"எனக்கும்... பரணிக்கும் மட்டும்தான் தெரியும்."

"ஷ்யூர்..."

"ஷ்யூர்..."

"பரணி போட்ட திட்டப்படி அகர்வாலைக் கொல்றதுக்காக அவர் வீட்டுக்குப் போனார். ஆனால் அவர் போறதுக்கு முன்னாடியே அகர்வாலை யாரோ தீர்த்து கட்டிட்டாங்க...அப்படித்தானே!"



"ஆமா ஸார்..."

"இன்னிக்கு நடிகை சுனந்தாவைக் கொல்றதுக்காக போனவரை வேற யாரோ சம் எக்ஸ் சுட்டுக் கொன்றிருக்காங்க..." தாடையை யோசனையாய் தேய்த்த விவேக் டாக்டரை ஏறிட்டான்.

"அந்த நடிகையோட வீடு எங்கே இருக்குன்னு தெரியுமா டாக்டர்?"

"தெரியும்..."

"வந்து காட்டுங்க பார்க்கலாம்..."

## 19

இருட்டில் புதைந்து போயிருந்த சுனந்தாவின் பங்களாவுக்கு முன்னால் ஜீப்பை நிறுத்தி விவேக்கும் டாக்டரும் பஞ்சவர்ணமும் கீழே இறங்கினார்கள். சாத்தப்பட்டிருந்த காம்பவுண்ட் கேட்டுக்கு முன்னால் போய் நின்றார்கள். கேட்டில் இருந்த விக்கெட் டோரைத் திறந்து மீசைக்கார வாட்ச்மேன் ஒருவன் எட்டிப் பார்த்தான்.

"யார் வேணும்...?"

"சுனந்தா இருக்காங்களா...?"

"நீங்க யாரு...?"

"போலீஸ்..."

போலீஸ் என்று சொன்னதுமே வாட்ச்மேன் அவசர அவசரமாய் கேட்டைத் திறந்தான். பின்பு பக்கத்தில் வந்து சொன்னான்.

"அம்மா... மெட்ராஸ் போயிட்டாங்க ஸார்..."

"மெட்ராஸ் போயிட்டாங்களா...? எப்போ... போனாங்க...?"

''நேத்து சாயங்காலம் ஏழுமணி ஃபிளைட்ல''

''வீட்ல இப்போ யார் இருக்காங்க.''

''யாருமில்ல ஸார்... வீடு பூட்டியிருக்கு.''

''சாவி உன்கிட்டே இருக்கா...?''

''இல்ல ஸார்... அம்மா கொண்டு போய்ட்டாங்க...''

''சுனந்தா இங்கே எத்தனை நாளா தங்கியிருந்தாங்க...''

''ரெண்டு நாளா... ஸார்''

''எதுக்காக கோயமுத்தூர் வந்தாங்கன்னு தெரியுமா?''

''தெ... தெரியாது ஸார்...''

''திடீர்னு எதுக்காக மெட்ராஸ் கிளம்பிப் போனாங்க? அதுவாவது தெரியுமா?''

''தெ... தெரியாது... ஸார்...''

அவனை மேற்கொண்டு விசாரிப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்பதை புரிந்து கொண்ட விவேக் டாக்டரோடு ஜீப்புக்குத் திரும்பினான். ஜீப்பில் ஏறிக் கொண்டே கேட்டான்.

''பரணியோட பார்ட்னர் பேரு கருணாகரன் தானே?''

''ஆமா... ஸார்...''

''அவர் வீடு உங்களுக்குத் தெரியுமா...?''

''தெரியும்...''

''இப்போ... அவரைப் பார்க்கப் போறோம்''

இருவரும் ஜீப்புக்குள் நுழைந்ததும் அது புறப்பட்டது. டிரைவர்க்கு வழியைச் சொன்னார் டாக்டர். விவேக் கேட்டான். ''கருணாகரன் உங்களுக்கு நல்ல பழக்கமா?''



''ம்... பரணியோட நிறைய தடவை பார்த்திருக்கேன்.''

''அவங்களுக்குள்ளே... எண்ணிக்காவது... எந்த விஷயத்துக் காவது... மோதல் ஏற்பட்டிருக்கா...?''

''எனக்கு தெரிஞ்ச வரைக்கும் இல்ல ஸார்...''

''கருணாகரனும், பரணியும் எத்தனை வருஷமா பார்ட்னர்ஸா இருக்காங்க...?''

''ஏழெட்டு வருஷமா...''

''நீங்களும் பரணியும்... போட்ட இந்த விபத்து திட்டம் கருணாகரனுக்குத் தெரியுமா...''

''தெரியாது ஸார்...''

''தெரியாதுன்னு அவ்வளவு நிச்சயமா எப்படிச் சொல்றீங்க!''

''ஹாஸ்பிடல்ல படுத்திட்டிருந்த பரணியைப் பார்க்க வந்த கருணாகரன் விபத்து உண்மையாவே நடந்ததுன்னு நினைச்சு கண் கலங்கினார். பரணியைப் பார்க்கிறதுக்காக சாயந்தர நேரங்கள்ல தினமும் வந்துட்டிருந்தார். எங்க திட்டம் அவருக்குத் தெரிஞ்சிருந்தா... கருணாகரனோட பேச்சும் நடத்தையும் அவ்வளவு இயல்பா இருந்திருக்காது...''

ஜீப் அடுத்த சில நிமிடங்களில் கருணாகரனின் வீட்டுக்கு முன்னால் போய் நிசப்தமானது. விவேக்கும், டாக்டரும் இறங்கி வீட்டுக்குள் நுழைந்து காலிங் பெல்லைத் தட்டி நல்ல தூக்கத்தில் இருந்த கருணாகரனை எழுப்பினார்கள். வரவேற்பறை சோபாவில் உட்கார வைத்து விஷயத்தைச் சொல்ல அவர் கொஞ்சம் கொஞ்சமாய் திடுக்கிட்டுக் கொண்டே போனார். இரண்டு கைகளாலும் சோபாவைத் தாங்கிக் கொண்டார். கண்களில் நீர் திரள தொண்டையடைக்கச் சொன்னார்.

''ஸார்... இது எனக்குப் பெரிய ஷாக் நியூஸ்... ஐ... குட்நாட் கண்ட்ரோல் மை பீலிங்க்ஸ்...''

''மிஸ்டர் கருணாகரன்! உங்களுக்கும் பரணிக்கும் பொதுவான எதிரிகள் யார்ன்னு சொல்ல முடியுமா?''

''அப்படி யாரும் கிடையாது ஸார்...''

''பரணி - சுனந்தா தொடர்பு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

''ஆடிட்டர் தேவராஜ்... அகர்வாலோடு சேர்ந்து உங்களுக்கு விரோதமா செயல்பட்டது தெரியுமா?''

''அதுவும் தெரியாது...''

உள்ளே டெலிபோன் கதறியது.

எழ முயன்ற கருணாகரனை கையமர்த்தினான் விவேக். அவனே மெல்ல நடந்து போய் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''ஹலோ...! கருணாகரன்! நீ சொன்னபடி எல்லாத்தையும் முடிச்சிட்டேன். போலீஸ் எந்த நிமிஷமும்... உன் வீட்டுக்கு வரலாம்... ஜாக்கிரதையா என்கொய்ரியை ஃபேஸ் பண்ணு. வேர்த்து வழியாதே...''

...விவேக் மூச்சு காட்டாமல் நிற்க... மறுமுனையில் அவன் தொடர்ந்தான். ''நான் நாளைக்கு ராத்திரி பத்து மணிக்கு மேல உன் வீட்டுக்கு வர்றேன். எனக்குப் பேசின பணத்தைக் கொடுத்துடு... உனக்கு வேண்டாத ரெண்டு பேரைத் தீர்த்துக் கட்டியிருக்கேன்... பேசின தொகைக்கு மேல... இந்த பரமேஷுக்கு ஒரு போனஸ் தொகையையும் கொடுக்கணும்...''

''டொக்''



ரிஸீவர் வைக்கப்பட விவேக்கும் ரிஸீவரை வைத்துவிட்டு கருணாகரனிடம் வந்தான். அவர் கேட்டார்.

''யார்... ஸார்... போன்ல...?''

விவேக் அவரைக் கூர்மையாய் பார்த்துக் கொண்டே உட்கார்ந்தான். மெல்லிய குரலில் கேட்டான்.

''பரமேஷ் யாரு?''

கருணாகரன் நெற்றி சுருங்கினார்.

''பரமேஷா?''

''ஆமா...''

''பரமேஷ்னு எனக்கு யாரையும் தெரியாதே...?''

''கருணாகரன்! நீங்க ரொம்ப நேரத்துக்கு பொய் பேசிட்டிருக்க முடியாது. உங்க இன்ஷ்டரக்ஷன்படிதான் அந்தப் பரமேஷ் ரெண்டு கொலைகளைப் பண்ணினதா போன்ல சொல்றான்...''

''என்னோட இன்ஷ்ட்ரக்ஷனா...?''

''எஸ்...''

கருணாகரன் பதட்டமாய் எழுந்து விவேக்கின் கைகளைப் பற்றிக் கொண்டார். ''ஸார் அந்த பரமேஷ் யார்ன்னே எனக்குத் தெரியாது...''

''ஸாரி... கருணாகரன்! உங்ககிட்டே என்னமோ தப்பு இருக்கு. உங்களை ஸ்டேஷனுக்கு கொண்டு போனா உண்மையைச் சொல்லிடுவீங்க...''

வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கி கருணாகரனை நகர்த்திக் கொண்டு போனான் விவேக்.

## 20

அழுது அழுது கண்கள் வெந்து போயிருந்த கிருபாவை ஏறிட்டான் விவேக். நேரம் காலை நேரம் 7.30

"மிஸஸ் பரணி! உங்க கணவரோட பார்ட்னர் கருணாகரன் கொலைக் குற்றங்களுக்கு உடந்தையாய் இருந்திருக்கிறார். பரமேஷ்ங்கிற நபர் மூலமா அகர்வாலையும் உங்க கணவரையும் தீர்த்துக் கட்டியிருக்கார்... கருணாகரனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போய் விசாரிக்க வேண்டிய முறையில் விசாரிச்சுப் பார்த்துட்டோம்... ஆனா ஆள் உண்மையைச் சொல்லலை. 'பரமேஷ்ங்கிற' நபரையே தனக்குத் தெரியாதுன்னு சொல்றார். உங்களுக்கு ஒரு வேளை அந்தப் பரமேஷை தெரிஞ்சிருக்க லாம்ங்கிற எண்ணத்துல நான் வந்தேன். உங்களுக்குப் பரமேஷைத் தெரியுமா?"

"தெ... தெரியாது..."

"நல்லா யோசிச்சு பாருங்க... மிஸஸ் பரணி."

"ஸாரி... இனிமே யாரைப் பிடிச்சு... என்ன பிரயோஜனம்? என்கிட்டே எதுவும் கேக்காதீங்க... அந்தப் பாவி கருணாகரனோட பார்ட்னர்ஷிப் வேண்டாம்ன்னு தலை தலையா அடிச்சிக்கிட்டேன். அவர் கேட்கலை... அவன் என்ன வேணுமினாலும் பண்ணி யிருப்பான்."

"உங்க கணவருக்கும் கருணாகரனுக்கும் காண்ட்ராவர்ஸி வந்திருக்கா...?"

"நி... நிறைய தடவை..."

"கடைசியா எப்போ வந்ததுன்னு சொல்ல முடியுமா?"



"போன மாசம்... கம்பெனி பாலன்ஸ்ஷீட் விவகாரத்துல..."

"உங்க கணவரோட ரூம் எது...?"

"மாடியில்..."

"பார்க்கலாமா...?"

"வாங்க..." கிருபா கூட்டிக் கொண்டு போனாள். மாடியில் முதல் ரூம் காற்றோட்டமாய் இருந்தது. சுவர் அலமாரிகளில் நிறைய புத்தகங்கள் தெரிந்தன. ஏஸி ஊமையாய் மௌனம் சாதிக்க கண்ணாடி ஜன்னல்கள் திறந்து - சூரிய வெளிச்சத்தை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தது. சுவரோரமாய் இரட்டைக் கட்டில்கள் - வெள்ளை விரிப்போடு தெரிந்தது.

"பெட்ரூமும் இதேதான்... இல்லையா...?"

"ஆமா..."

"பரணி டயரி எழுதுவாரா...?"

"அவருக்கு அந்தப் பழக்கமில்லை..."

"அவரோட ப்ரண்ட்ஸ்... அஃபிஷியல் பர்சன்ஸ் டெலிபோன் நெம்பர்ஸை எல்லாம் எதுல நோட் பண்ணி வைப்பார்...?"

"டெலிபோன் டைரக்டரியின் முதல் பக்கத்திலேயே நோட் பண்ணிக்குவார்."

"அந்த டைரக்டரி எங்கே...?"

கிருபா அலமாரிக்கு போய் லேசாய் தூசு சட்டை போட்டிருந்த டெலிபோன் டைரக்டரியை கொண்டு வந்து கொடுத்தாள்.

விவேக் வாங்கிப் புரட்டினான்.

இம்பார்ட்மெண்ட் டெலிபோன் நெம்பர்ஸ் - என்கிற தலையின் கீழ் ஏராளமான பெயர்கள், அரவிந்த்குமார், பத்ரிநாராயணன், சந்திரசேகரன், தனபால், ஏகாம்பரம், பிரான்சிஸ்...

விவேக் பரமேஷைத் தேடினான்.

இல்லை...

நிமிர்ந்தான்.

"பழைய டைரக்டரி இருக்கா...?"

கிருபா மறுபடியும் அலமாரியை நோக்கிப் போக விவேக் கையிலிருந்த டைரக்டரியின் இரண்டாவது பக்கத்தைப் புரட்டினான்.

பார்வை சட்டென்று பிரேக் போட்டது.

இரண்டாவது பக்கத்தின் ஓரத்தில்

XROB-000-000 கிறுக்கலாய் ஒரு வாசகமும், ஆறு சைபர்களும் தெரிந்தன. பழைய டைரக்டரியோடு வந்த கிருபாவிடம் அதைக் காட்டினான்.

"மிஸஸ் கிருபா...! இந்த வாசகத்துக்கு என்ன 'மீனிங்'ன்னு சொல்ல முடியுமா...?"

கிருபா அதை பார்த்துவிட்டு 'தெரியலையே' என்றாள்.

"உங்க கணவருடைய கையெழுத்து தானே...?"

"ஆமா..."

"இந்த Xரோப் என்ற வார்த்தையும் ஆறு சைபரும் எதை மீன் பண்ணுதுன்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்களேன்."

கிருபா நெற்றியை தேய்த்துக் கொண்டு அந்த XROB-000-000 வாசகத்தை நிமிஷ நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தலையை தீர்க்கமாய் ஆட்டினாள்.

"ஸாரி எனக்குத் தெரியலை..."



# 21

இரவு மணி பத்து.

ராஜேந்திரனும், ரூபலாவும் டெலிபோன் டைரக்டரியின் இரண்டாம் பக்கத்திலிருந்த XROB-000-000 வையே உற்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரூபலா விவேக்கிடம் கேட்டாள்.

"இதைக் கருணாகரன் கிட்டே காட்டினீங்களா?"

"காட்டினேன்..."

"என்ன சொன்னார்?"

"அவருக்கும் தெரியலை. ஆடிட்டர் தேவராஜ், டாக்டர் பஞ்சவர்ணம் எல்லார்கிட்டேயும் காட்டியாச்சு. யாருக்கும் இந்த XROB-000-000 என்னான்னு தெரியலை."

"இந்த ஆறு சைபரும் ஒரு டெலிபோன் எண்ணாக ஏன் இருக்கக் கூடாது?" ராஜேந்திரன் கேட்டான்.

"அதையும் நான் யோசிச்சுப் பார்த்துட்டேன். டெலிபோன் டைரக்டரியில் - குறிக்கப்பட்டிருக்கிறதுனால இது ஒரு டெலிபோன் எண்தான். பட்... இந்த நெம்பரை எப்படிக் கண்டுபிடிக்கிறது X ஆல்பட்டில் XROB என்கிற வாசகமே இல்லையே. எக்சேஞ்ஜிலும் விசாரிச்சுப் பார்த்துட்டேன்."

ரூபலா கையைச் சொடுக்கினாள்.

"என்னங்க...?"

"ம்..."

''அந்த ஆறு சைபர்களையும் கொஞ்சம் உற்றுப் பாருங்க.''

விவேக் உற்றுப் பார்த்தான்.

''என்ன சொல்ல வர்றே ரூபி...?''

''அந்த ஆறு சைபர்களுக்கு - மேலேயும் கீழேயும்... சின்னச் சின்னப் புள்ளி வெச்சிருக்கு. நோட் பண்ணீங்களா?''

விவேக் பார்வைக்கு உன்னிப்பைக் கொடுத்தான். ரூபலா சொன்னது வாஸ்தவம்தான்.

முதல் சைபர்க்கு மேலே ஒரு புள்ளி. இரண்டாவது சைபருக்கும் மூன்றாவது சைபர்க்கும் கீழே புள்ளிகள். நான்காவதுக்கு மேலே ஐந்தாவதுக்கு கீழே ஆறாவது சைபருக்கும் மேலேயும் புள்ளிகள் தெரிந்தது.

''மறுபடியும் குழப்பம். இந்தப் புள்ளிகள் எதுக்கு...?''

ராஜேந்திரன் சொன்னான்.

''இதோ ஏதோ ஒரு 'கோட்' நெம்பர். இது என்ன கோட் நெம்பர்ங்கிறதைக் கண்டுபிடிச்சா... டெலிபோன் நெம்பர் கிடைச்சுடும்...''

விவேக் ரூபலாவை ஏறிட்டான்.

ரூபி XROB வார்த்தையை மாத்திப் போட்டு எழுதிப் பாரு'' ரூபலா எழுதி படித்தாள்.

"BORX"

''அடுத்த வார்த்தை''

RXBO

"இன்னும்...?"

"ROBX" - ROBயையும் Xயையும் தள்ளி எழுதினாள் ரூபலா. அதே விநாடி விவேக் மலர்ந்தான். கட்டை விரலை உயர்த்தினான்.



''ரூபி... ஐ... காட்... இட்...''

''என்ன...?''

"ROB-Xம் ஒரு முழுப்பெயரோட சுருக்கமா ஏன் இருக்கக் கூடாது. உதாரணத்துக்கு XAVIER... ROB... ROBERT"

''லேசா புரியுது...''

''எக்ஸ் ஆல்பபட் வரிசையைப் பாரு...''

ரூபலா டைரக்டரியைப் புரட்டி எக்ஸ் வரிசையை எடுத்துப் பார்த்தாள் விவேக் கேட்டான்.

''சேவியர் ராபர்ட்ங்கிற பேர்ல யாராவது இருக்காங்களா?''

''இல்லை...'' என்றாள் ரூபலா.

''சரி ஆர் - ஆல்பபட் வரிசைக்கு வா... ராபர்ட் சேவியர்ங்கற பேர்ல யாராவது இருக்காங்களான்னு பாரு...''

ரூபலா 'ஆர்' வரிசையை எடுத்து ஆட்காட்டி விரலை ரங்கநாதன்கள் - ராஜகோபாலன்கள் மேல் ஒட்டிக் கொண்டே வந்தாள். அடுத்த பக்கத்தை திருப்பியதும் கத்தினாள்.

''இருக்கு ராபர்ட் சேவியர்... பேர் இருக்கு...''

''டெலிபோன் நம்பர் என்ன?''

''699696''

''ஆறும் ஒன்பதும் மாறி மாறி கலந்த டெலிபோன் நெம்பர்.''

ராஜேந்திரன் குறுக்கிட்டு கேட்டான். ''அந்த ஆறு சைபர்களுக்கும் 699669- எப்படிப் பொருந்தும் விவேக்?''

''பொருந்துது...''

''எப்படி?''

''சைபர்களையும் அந்தப் புள்ளிகளையும் உற்றுப்பாரு ராஜேந்திரா. முதல் சைபர்க்கு புள்ளி எங்கே இருக்கு...?''

"மேலே..."

"சைபரை ஆறு ஆக்க கோட்டை நீ எந்தப் பக்கமா போடுவே?"

"மேல் பக்கமா?"

"ஸோ... புள்ளி சைபர்க்கு மேல் பக்கமா இருந்தா ஆறு, கீழ்ப்பக்கமா இருந்தா ஒன்பது. இப்போ புள்ளிகளை வெச்சு நெம்பர்களைப் போட்டுப் பாரு..."

ராஜேந்திரன் போட்டுப் பார்த்துவிட்டு அகலமான கண்களோடு நிமிர்ந்தான். "அட...! ஆமாம்... 699669... வருது. இந்த நெம்பரை இவ்வளவு ரகசியமா பரணி வெச்சுக்க வேண்டிய அவசியம் என்ன?"

விவேக் குறுக்கிட்டுச் சொன்னான்.

"இது பரணியோட கையெழுத்தில்லை..."

"பின்னே...?"

"சொல்றேன் ரூபி. மொதல்ல ராபர்ட் சேவியரோட அட்ரஸ் என்னன்னு பாரு...?"

"நெம்பர் செவன் ட்டு ஃபைவ்... பெரம்பூர் பாரக்ஸ் ரோடு."

விவேக் எழுந்தான்.

"ராஜேந்திரன்! கிளம்பு... அந்த ராபர்ட்டை போய் கொஞ்சம் தடவிட்டு வருவோம்..."

## 22

பெரம்பூர் பாரக்ஸ் ரோட்டில் 725 நெம்பர் உள்ள வீட்டைக் கண்டுபிடித்து காரை காம்பவுண்ட் கேட்டுக்கு முன்னால் நிறுத்தி விவேக்கும், ராஜேந்திரனும் கீழே இறங்கியபோது - உள்ளே



போர்டிகோவில் நின்றிருந்த கார் ஒன்று வெளியே புறப்பட்டுப் போக இக்னீஷியனை உசுப்பிக் கொண்டிருந்தது.

விவேக்கும் ராஜேந்திரனும் உள்ளே நுழைந்தார்கள். கார் உதறுவதை நிறுத்திக் கொள்ள ட்ரைவிங் ஸ்தானத்திலிருந்து ஒரு இளைஞன் எட்டிப் பார்த்தான்.

"ஸ்... யார் வேணும்...?"

"மிஸ்டர் ராபர்ட்..."

"நான்தான்..."

"நாங்க போலீஸ்... உங்ககிட்டே சின்ன விசாரணை..."

"அபௌட்...?"

"பரணியோட மர்டர் குறித்து?"

"பரணி யார் அந்தப் பரணி?"

"கிருபாவோட ஹஸ்பெண்ட்..."

"கிருபா..."

"ராபர்ட் மொதல்ல காரை விட்டுக் கீழே இறங்குங்க. இறங்கி வந்தாத்தான் எல்லாமே புரியும்..."

ராபர்ட் திடகாத்திரமான உடம்போடு ஜெர்ஸி பனியனில் திமிறும் மார்புக் கட்டோடு காரினின்றும் கீழே இறங்கினான்.

"வீட்ல யார் இருக்காங்க...?"

"நான் மட்டும்தான்..."

"ராஜேந்திரா! ஸாரோட பாண்ட் பாக்கெட்டை சர்ச் பண்ணி உள்ளே இருக்கிறதை எடு..."

ராபர்ட் கத்தினான்.

''நோ... நான் இதை அனுமதிக்க முடியாது...''

''ஸ்டேஷனுக்கு போயிடுவோமா...!''

ராபர்ட் மௌனமாக - ராஜேந்திரன் அவனை நெருங்கி பாண்டின் இரண்டு பாக்கெட்டுக்குள்ளும் கையை நுழைத்து செண்ட் வாசனையோடு ஒரு கர்சீப். ஒரு சிகரெட் பாக்கெட் லைட்டர், மனிபர்ஸ்...

விவேக் மணிபர்ஸைத் திறந்து பார்க்க உள்ளே இருந்த கண்ணாடித் தாளுக்குள் - 'கிருபா' பாஸ்போர்ட் சைஸ் போட்டோவில் சிரித்தாள். விவேக் அந்த போட்டோவை உருவி - ராபர்ட்டின் முகத்துக்கு நேரே நீட்டினான்.

''இவதான் கிருபா... தெரியாதுன்னு சொன்னியே...?''

ராபர்ட் சட்டென்று முஷ்டியைக் குவித்து தன் வலுவான வலது கையை விவேக்கின் முகத்தை நோக்கி வீச விவேக் குபீரென்று குனிந்து தன் தலையால் ராபர்ட்டின் அடிவயிற்றை மோதினான்.

''அம்மா...'' ராபர்ட் தன் தாயாரைக் கூப்பிட்டான். விவேக் அவன் கழுத்தைப்பற்றி பானெட்டின் மேல் சரித்து... கேட்டான்.

''பரணியைக் கொன்றது நீதானே?''

''நோ...''

''அகவர்வாலைக் கொன்னது கூட நீ இல்லையா?''

''நோ...''

''ராஜேந்திரா...''

''என்ன விவேக்?''

''முன்பக்க காரோட கதவைத் திறந்துவை.''

அவன் திறந்து வைக்க... விவேக் ராபர்ட்டை நகர்த்திக் கொண்டு போய் கார்க் கதவின் இடுக்கில் ராபர்ட்டின் கையை நுழைத்து காலால் காரின் கதவை எட்டி உதைத்து சாத்தினான்.



ராபர்ட் வீறிட்டான்.

''ஆ...ஆ...ஆ...ஆ...?''

''சொல்லு!... அகர்வாலையும் பரணியையும் தீர்த்துக் கட்டினது நீதானே?''

''ஆ... ஆமா...'' ராபர்ட் வலியில் துடித்துக் கொண்டே தலையாட்டினான்.

''கொல்லச் சொன்னது யாரு...?''

''கிருபா...''

''கொஞ்சம் விளக்கமாச் சொல்றியா?''

## 23

மறுநாள் காலை பதினோரு மணி. போலீஸ் ஸ்டேஷன்.

கேஸின் விபரத்தை - பத்திரிகை நிருபர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தான் விவேக். ''ராபர்ட்டுக்கும், கிருபாவுக்கும் கடந்த ஆறுமாத காலமாகத்தான் - அவங்களுக்குள்ளே 'இல்லீகல் கான்டாக்ட்' உண்டாகியிருக்கு. அந்த உறவு வெளியே தெரியாதபடிக்கு ரொம்பவும் ஜாக்கிரதையா பழகிட்டும் வந்திருக்காங்க. கிருபாவுக்கு கொஞ்ச நாளாகவே ஒரு பயம். ராபர்ட்டுக்கும், தனக்கும் இருக்கிற உறவு தன் கணவருக்கு தெரிஞ்சா அவனால உயிருக்கு ஆபத்து வரும்கிறதை தெரிஞ்சுகிட்டு விஷயம் பரணிக்கு தெரியறதுக்கு முன்னாடியே அவனைத் தீர்த்துக்கட்ட நினைச்சிருக்கா. ஆரம்பத்துல ராபர்ட் இதுக்கு ஒத்துக்கலை. ஆனா நாட்கள் போகப் போக அவன் மனதிலும் அந்த எண்ணம் நுழைஞ்சிருக்கு. இன்கம்டாக்ஸ் ஆபீசர் அகர்வாலுக்கும் ராபர்ட்டுக்கும் ஏற்கனவே ராபர்ட் வீட்ல நடந்த ஒர ரெய்ட்

விஷயமா பகை இருந்து வந்திருக்கு. அகர்வாலைத் தீர்த்து கட்டினாத்தான் தன்னோட வருமான வரி வழக்கு கோர்ட்டுக்கு போகாமே தடுக்க முடியும்ன்னு நினைச்ச ராபர்ட் மூணு நாளைக்கு முன்னாடி அகர்வால் வீட்டுக்குப் போய் அவரைத் தீர்த்து கட்டியிருக்கான். ஒரு கொலையைச் செய்ததுமே ராபர்ட்டுக்கு துணிச்சல் பிறந்திருக்கு. ஹாஸ்பிடலில் அட்மிட்டாகி கால்களை அசைக்க முடியாமல் படுத்திருக்கும் - பரணியைக் கொல்றதுக்காக பின்பக்கமாக வந்தவன், பரணி அறையின் ஜன்னலிருந்து ஜெர்கின் கோட் சகிதம் கீழே குதிச்சுப் போனதை ஆச்சரியமாப் பார்த்திருக்கான். பின்னாடியே தொடர்ந்து போய் இருட்டான ஆடிஸ் வீதிக்குப் போனதும் சுட்டிருக்கான்...''

''கிருபாவும் குற்றத்தை ஒத்துக்கிட்டாளா ஸார்...?''

''நிச்சயமா. ஒத்துக்கிட்டு ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கா...''

''கருணாகரனுக்கு பரமேஷ்ன்னு யாரோ ஒருத்தன் போன் பண்ணி...'' கொலை வழக்கில் மாட்டி வைக்கணுங்கறதுக்காக ராபர்ட்டே போன் பண்ணி அதுவும் நான் அங்கே இருக்கிற நேரமா பார்த்து போன் பண்ணி கருணாகரன்கிட்டே பேசற மாதிரி போட்டு போனை வெச்சுட்டான். கருணாகரன் மேலேயும் எனக்கு சந்தேகம் இருந்ததினாலே அவரை ஸ்டேஷனுக்கு கூட்டிப் போய் விசாரிக்க வேண்டி வந்தது.''

''டாக்டர் பஞ்சவர்ணம் கைது செய்யப்பட்டிருக்காரா ஸார்?''

''எஸ். பரணியோட கொலை முயற்சிகளுக்கு அவரும் ஆதரவு காட்டி உடந்தையாய் இருந்திருக்கிறார். சட்டம் அவருக்குத் தரவேண்டிய தண்டனையைத் தரும்.''

''இந்த கேஸ் வெற்றிகரமா முடிஞ்சதுக்கு நீங்க யாருக்கு நன்றி சொல்ல விரும்பறீங்க...?''

''தொலைபேசி... ஸாரி... தொலைபேசி எண் 000000க்கு. கிருபா டெலிபோன் டைரக்டரியில் கிறுக்கி வெச்ச XORB 000000



மட்டும் என் பார்வைக்குத் தட்டுப்படாமே இருந்திருந்தா... இந்தக் கேஸ்ல இன்னும் திணறிட்டிருப்பேன்.''

விவேக் சொல்லிக் கொண்டிருந்த அதே விநாடி மேஜையின் மேலிருந்த டெலிபோன் கதற ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ'' நான் ரூபலா...''

''என்ன விஷயம் ரூபி...''

''நான் ரெடி... சூட்கேஸ்ல எல்லாமே எடுத்துப் பேக் பண்ணியாச்சு...''

''என்னது ரெடியா? எங்கே போகப் போறோம்...?''

''கேஸை சீக்கிரமாவே முடிச்சுட்டீங்க... அதனால என்னை நிஜமாவே ஊட்டி... முதுமலை பாரஸ்ட் கூட்டிட்டுப் போகப் போறீங்க...''

''யார் சொன்னது...''

''நான் சொல்றேன். வரப்போறீங்களா இல்லையா...?''

நல்லெண்ணை விளம்பரத்தில் - சித்ரா அதட்டுகிற குரலில் ரூபலா அதட்ட - விவேக் ஒரு சராசரிக் கணவனாக மாறி குரலில் பவ்யம் காட்டி...

''வர்றேன்'' என்றான்.